# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60. தொலை பேசி: 23411 நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 | புரட்டாதி 17, | ஷவ்வால் 8 | (3-10-76) ஞாயிறு | புத்தகம் 30 | இதழ் 47


## ரூபா நோட்டுக்களிலும் தமிழ்ஈழ சுலோகம்!

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்துவரும் ஏராளமான ரூபா நோட்டுக்களில் "தமிழ்ஈழம் அமைப்போம்" "தமிழ்நாடு காண்போம்" என்று இன்னும் பலவித இனவிடுதலை சுலோகங்கள் எழுதப்பட்டிருப்பது தென்னிலங்கை வாசிகளான சிங்களவர்களுக்கு எரிச்சலை மூட்டியிருக்கிறதாம். இலட்சிய ஆர்வமிக்க தமிழ் இளைஞர்கள் ரூபா நோட்டுக்களில் தமிழ்ஈழ விடுதலை சுலோகங்கள் எழுதுவதை இப்போது ஓர் இயக்கமாக்கி வருகிறார்கள்.

[5-ம் பக்கம் பார்க்க]

# கூட்டணி பா. உ.க்கள் மூவரது சட்டத்தரணிகளுக்கும் கருத்துக்கூற அனுமதி!

## இடைபுகு மனுமீது உயர்நீதிமன்றம் தீர்ப்பு! 13-ம் திகதி விசாரணை ஆரம்பம்!!

அவசரகாலப் பிரகடனம் செல்லுபடியாகாது என்ற ட்ரயல் - அற் - பார் மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பு சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் நடைபெறும் விசாரணையின்போது, ட்ரயல் - அற் - பார் மேல் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூன்று பா.உ.க்களான திருவாளர்கள் வி. என். நவரத்தினம், க. துரைரத்தினம், பண்டிதர் க. பொ. இரத்தினம் ஆகியோர் சார்பில் அவர்களது சட்டத்தரணிகள் தத்தம் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு ஒரு குறிக்கப்பட்ட அளவு நேரம் ஒதுக்கப்படுமென்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் அறிவித்துள்ளனர்.

ட்ரயல் - அற் - பார் மேல் நீதிமன்றத் தீர்ப்பு சம்பந்தமான உயர்நீதிமன்ற விசாரணை அக்டோபர் 13ம் திகதி ஆரம்பமாகும். இவ்வழக்கு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதாலும்,, அவசரகாலச் சட்டம் உண்டா இல்லையா என்ற கேள்விக்கு விரைவில் முடிவுகாண வேண்டியிருப்பதாலும் அதிக காலத்தை நீடிக்காது வழக்கு விசாரணையை விரைவில் முடிக்க வேண்டியிருப்பதாக பிரதம நீதியரசர் திரு. விக்டர் தென்னக்கூன் குறிப்பிட்டார்.

அரசியல்சட்டத்தின் வாசகங்களுக்கமைய அவசரகாலப்பிரகடனம் பிரகடனப்படுத்தப்படவில்லையென்றும், செல்லுபடியாகாத அவசரகால விதிகளின் கீழ் உருவாக்கப்பட்ட ட்ரயல்—அற்—பார் நீதிமன்றத்துக்கு வழக்கை நடத்துவதற்கு அதிகாரமில்லையென்றும் ஏகமனதாகத் தீர்ப்பளித்து, திரு. அமிர்தலிங்கத்தை மேல் நீதிமன்ற நீதிபதிகளான திரு. சூசா, திரு. சில்வா, திரு. சிவாசெல்லையா ஆகிய மூவரும் 10-9-76ல் விடுதலைசெய்தது தெரிந்ததே.

ட்ரயல்-அற்-பார் நீதிமன்றத்தின் இத்தீர்ப்பை ஆட்சேபித்து குறித்தமேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரையும், முதல் மூன்று பிரதிவாதிகளாகவும், திரு. அமிர்தலிங்கத்தை நான்காவது பிரதிவாதியாகவும் ஆக்கி, உயர்நீதிமன்றத்திற்கு அரசாங்கத்தின் சார்பில் சட்டமா அதிபர் இரு மனுக்களை தாக்கல் செய்திருந்தார். மீளாய்வு, றிட், ஆகிய இந்த இரண்டு மனுக்களையும் உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு இதற்கான பூர்வாங்க விசாரணையை 30-9-76ல் நடத்தியது.

இதற்கிடையில் திரு. அமிர்தலிங்கத்துடன் சேர்த்து ட்ரயல் — அற் — பார் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்ட கூட்டணிப் பா. உ.க்களான

—4-ம் பக்கம்பார்க்க

## ஜே. ஆர். கூற்றுக்கு அமிர் மறுப்பு!



**1977ம்** ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெருது ஒத்திவைக்கப்படுமானல், தேர்தலை நடத்தக்கோரி ஐக்கிய தேசியக்கட்சி தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து போராட்டம் நடத்தும் என்று கண்டியில் ஒரு கூட்டத்தில் ஐ. தே. க. தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியிருந்ததை, தமிழரசுக் கட்சியின் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபருமான நாவலர் அ. அமிர்தலிங்கம் மறுத்துள்ளார்.

"ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தாம் தேர்தல நடாத்துமாறு கோரி நடத்தும் போராட்டத்தில் தமிழரசுக்கட்சியும் சேர்ந்து போராடும் என்று தென்னிலங்கையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசியிருக்கிறர் எம்முடன் தொடர்பு கொண்டு இதுபற்றி அனுமதி கேட்காமல அவர் இவ்வாறு கூறியிருக்கிறர். ஆனல் தமிழரசுக் கட்சியோ, தமிழர் விடுதலைக் கூட்டணியோ இப்போராட்டத்தில் இறங்கப்போவது இல்லை. எமக்குத் தமிழின விடுதலைதான முக்கியமே கவிர, எந்தச் சிங்களக்கட்சி ஆட்சிக்கு வர வேண்டுமென்பது முக்கியமல்ல. கடந்தகாலத்தில் ஆட்சிக்குவந்த சிங்கள அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி ஒப்பந்தம்செய்து பயனில்லாத நிலையில் நாம்

—8-ம் பக்கம் பார்க்க

## தமிழீழக் கோரிக்கையை விளக்கும் 25,000 கடிதங்கள்!

### அக்டோபர் 2ல் கூட்டணி நடவடிக்கை!

புதிய அரசியலமைப்பு சட்டத்தின் செல்லுபடியாகும் தன்மை பற்றி சவால் விட்டும், தமிழீழக்கோரிக்கையின் அடிப்படையை எடுத்து விளக்கி அதற்கு ஆதரவு கோரியும் 25,000 கடிதங்களை சிங்கள மக்களுக்கு தமிழர் விடுதலைக்கூட்டணித்தொண்டர்கள் காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2ம் திகதியிலிருந்து அனுப்பி வைக்கவிருக்கிறார்கள். ஒரு தொகுதியிலிருநது சுமார் 1000 தொண்டர்கள் இந்த இயக்கத்தில் கலந்து கொள்ளுவார்கள.

சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ள இக்கடிதங்களில், இவற்றை அனுப்பும் கூட்டணித்தொண்டர்கள் தமது முழுப்பெயர், முகவரி ஆகியவற்றைக் குறிப்பிட்டு கையெழுத்திட்டு அனுப்புவார்கள். ஜனதிபதி, அமைச்சர்கள், பொலீஸ் அதிகாரிகள், மற்றும் அரசாங்க உயர் அதிகாரிகள், அரசாங்க, எதிர்க்கட்சி சிங்கள எம். பீக்கள், உள்ளூராட்சி சபைத்தலைவர்கள் போன்ற சிங்களப பிரமுகர்களுக்கு இக்கடிதங்கள் அனுப்பிவைக்கப்படவிருக்கின்றன.

ஒரு சட்டமறுப்பு நடவடிக்கையாகவும இக்கடிதம் அனுப்பும் நடவடிக்கையிருக்கும் என்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. இக்கடிதத்தை பெறுபவர், கடிதத்தை அனுப்பும் தொண்டர் மீது ஏதாவது சட்ட நடவடிக்கையெடுக்கும் பட்சத்தில் கூட்டணித் தொண்டர்கள் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருக்கிறார்கள்.

அனுப்பப்படும் கடிதம், ஏற்கெனவே இவ் வாரங்களுக்கு முன் சுதந்திரனில் வெளியிடப்பட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

## கூட்டணியில் சேருமாறு சுயாட்சிக்கழக தலைவருககு அழைப்பு

தமிழர்விடுதலைக்கூட்டணியுடன் சேர்ந்து தமிழ் ஈழத்தின் விடுதலைக்குப் போராட முன்வரும்படியும், கூட்டணியில்சேர்வதன் மூலம், தமிழ் இனத்தின் ஒற்றுமையைப் பலப்படுத்தும்படியும் சுயாட்சிக்கழகத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி அழைப்புவிடுத்துள்ளது.

மன்னாரில் கூடிய தமிழர் விடுதலைக்கூட்டணியின் நடவடிக்கைக் குழுவின் பணிப்புரைக்கிணங்க தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை நிலையச்செயலாளர் திரு. சு. நடராசா சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வி. நவரத்தினத்துக்கு இந்த அழைப்புக் கடிதத்தை எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலை கூட்டணியுடன் தமிழர் ஆசிரியர் சங்கமும் இணையவேண்டும்!

## மட்டுநகர் மாநாட்டின்போது தமிழாசிரியர் முன்னுள்ள கடமை!

**கடந்த 150 வருடங்களுக்கு மேலாக அந்நிய ஆக்கிரமிப்புக்களின் போதெல்லாம் இந்நாட்டில் தமிழ் மொழி அழிந்தொழிந்துவிடாமல் பாதுகாத்தவர்கள் தமிழாசிரியர்களென்பதை எவரும் மறுக்கமாட்டார்கள், தாய்மொழி வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் கண்ணும் கருத்துமாக இருந்த தமிழாசிரியர்கள் 1947ம் ஆண்டு பொதுத்தேர்தலின் பின் அரச ஊழியரல்லாத தமிழாசிரியர்கள் தத்தமது அபேட்சகர்களை ஆதரித்து பேசிவந்ததுடன் பகிரங்கமாக ஆதரவும் தேடினர்.**

பாடசாலைகளை அரசு பொறுப்பேற்ற பின் ஆசிரியர்களும் அரசு ஊழியராயினர். அப்போது பகிரங்கமாக ஆதரவு தருவதினின்றும் ஆசிரியர்கள் ஒதுங்கியிருந்தனர், இதற்கு முதல் காரணம் அவர்கள் முன் பெரும் பூதமாக நின்ற இட

வரை ஒத்துழைப்பும் உதவியும் நல்குவதன் மூலம் தமிழினத்தின் சுதந்திரத்திற்கு உழைப்பதெனவும் முடிவு செய்தது.

மொழிவழித் தொழிற் சங்கமொன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்க

பத்திரமற்ற ஆசிரியர்களும் பயிற்றப்பட்ட தமிழாசிரியர்களும் இச்சங்கத்தில் ஆரம்பத்தில் சேர்ந்தனர். தற்போது பட்டதாரிகளும், விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்களும், அதிபர்களும் அங்கத்துவம் வகித்து வருகின்றனர்.

1956ம் ஆண்டின் பின் தமிழ் மக்களுக்கேற்பட்ட அரசியல் விபத்தின்பின் இந்நிலை ஏற்பட்டுவருகின்றது.

இன்றோ தமிழ்மொழிக்கு அரசியல் சட்ட அந்தஸ்துக் கிடைக்கவில்லை. தமிழ்மாணவர் தரப்படுத்தலால் பின் தள்ளப்பட்டு வருகிறார்கள். தமிழ் மக்கள் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி

கம்—ஒரு அமைப்பு இருக்க வேண்டும் என்பதை எவரும் ஆட்சேபிக்கவேண்டியதில்லை.

### ஆசிரியர் பிரச்சினைகள்

இந்த அரசு பதவிக்கு வந்தபின் 1971 — 74க்கு மிடையில் 23,000 பேருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன. இவர்களில் 18,000 பேர் சிங்களவர். 1867 பேர் தமிழர் 12,507 பேர் முஸ்லீம்கள். இதே காலத்தில் சேவையிலிருந்து இளைப்பாறிய தமிழாசிரியர்களின் எண்ணிக்கையோ 3,500 ஆகும். இதிலிருந்து தமிழாசிரியர் நியமனம் கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளதென்பதை அறியலாம்.

வட்டாரக் கல்வி அதிகாரிகள், பட்டதாரிகள், விசேட ஆசிரியர்கள் நியமனம்பெற வாய்ப்பேற்படுமல்லவா?

தமிழர்சமுதாயம் அழிந்தபின் தமிழாசிரியர் இருக்கமாட்டார்கள். எனவே தமிழரான பட்டதாரி, விசேட ஆசிரியர்கள் இ. த. ஆ. சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்வதில் இனியும் காலம் கடத்தலாகாது.

"தமிழர் சமுதாயமென்பது ஒரு பெரிய வட்டம். அதில் தமிழாசிரியர் ஒரு சிறிய வட்டம். தமிழர் சமுதாய மென்ற பெரியவட்டம் அழிக்கப்படுமானால், சிறிய வட்டமாகிய தமிழாசிரியர் இருக்கமுடியாது." என்று இ. த. ஆ, சங்கத்

மாற்றமேயாகும். அன்று ஆசிரியர்களுக்கு நிலையான ஒரு இடமாற்றத்திட்டமில்லாமலிருந்ததும் இந்தப் பயத்திற்கு காரணமாக இருக்கலாம்

### அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்

சிங்களம் மட்டும் சட்டம் இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்களைச்சிந்திக்க வைத்தது. தமிழ் அரசாங்க ஊழியர் 1956ம் ஆண்டுக்குப் பின் மொழிவழித்தொழிற்சங்கங்களை ஏற்படுத்தினர். மொழி வழித்தொழிற்சங்கள ஏற்படுவதற்கு முன்பே தமிழாசிரியர்கள் தமது உரிமைக்காகவும் தமிழ்மொழியின் மேன்மைக்காகவும் தொழிற்சங்கங்கள் அமைத்த பெருமைக்குரியவர்கள்.

மொழிவழித் தொழிற் சங்கமான அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் தமிழ் மக்களுக்கு அநீதி இழைத்தபோதெல்லாம் தட்டிக்கேட்டது. இன்றோ தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு இத்தொழிற்சங்கம் பக்கபலமாக இருக்கின்றது. 31-7-76ல் யாழ். மத்திய கல்லூரியில் கூடிய அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 15வது மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் மனப்பூர்வமாக இணைவதென்று தீர்மானம் இயற்றப்பட்டது. கூட்டணியின் செயல் திட்டங்களுக்கு சங்கம் தனது ஆற்றலுக்கேற்ற

மாக இயங்குவதென்று பகிரங்கமாக முடிவு செய்தது இதுவே முதற் தடவையாகும்.

### தமிழர் ஆசிரியர் தீர்மானம்!

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தைத் தொடர்ந்து இ. த. ஆ. சங்க கிளைகள் நான்கு. தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்து செயற்பட வேண்டுமென்று தீர்மானம் எடுத்திருக்கின்றன. திருமலைக் கிளையில் முதன் முதல் இத்தீர்மானம் வந்தபோது அது ஏகமனதாக எதுவித எதிர்ப்புக் குரலுமின்றி நிறைவேறியது. திருமலைக் கிளையைத் தொடர்ந்து சாவகச்சேரிக் கிளையும், யாழ்ப்பாணக்கிளையும் இத் தீர்மானத்தை ஆதரித்து நிறைவேற்றியிருக்கின்றன.

இத்தீர்மானம் இம்மாதக் கடைசியில் மட்டக்களப்பில் நடக்க இருக்கும் வருடாந்த மாநாட்டிற்கு சமர்ப்பிக்கப்பட இருக்கின்றது. இந்த நேரத்தில் இலங்கையிலுள்ள தமிழர் ஆசிரியர் அனைவரும் இ. த. ஆ. சங்கத்தின் அங்கத்தவர்களாக இருக்கவில்லை என்பதையும் மனவருத்தத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

### தமிழர் ஆசிரியர்களின் ஒற்றுமையின்மை

தமிழர் ஆசிரியர்களைப் பொறுத்தவரை தராதரப்

தீவிர போராட்டத்தில் இறங்கியுள்ளது. சிறைபிடிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் சாகும்வரை உண்ணவிரதமிருக்க முற்பட்டனர். இக் கட்டுரையை எழுதும்போது 63 தமிழ் இளைஞர்கள் பல்வேறு காரணங்களுக்காகச் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் பிரச்சினைகளுடன் இரத்தத் தொடர்புடைய தமிழாசிரியர்கள் இன்று பல்வேறு தொழிற்சங்கங்களில் சேர்ந்திருக்கின்றனர். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தமிழாசிரியர்கள் அங்கம் வகித்தாலும் இன்னும் பல ஆயிரம் தமிழாசிரியர்கள் இச்சங்கத்தில் சேராது ஒதுங்கியிருக்கிறார்கள்.

### பொழிவழி அமைப்பு அவசியம்

ஈழத்தில் 105 ஆசிரிய தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. இவற்றுள் பலம் வாய்ந்த ஆசிரியர் தொழிற் சங்கஙகள் எட்டாகும்.

சிங்கள, தமிழ் ஆசிரியர்களின் சமசம்பளப்போராட்டத்தில் எட்டுச் சங்கங்களும் ஒன்றிணைந்து செயற்பட்டன. இதே போல் தமிழ் மாணவர் தரப்படுத்தலில் இ. த. ஆ. சங்கத்தைவிட ஏனைய ஏழு சங்கங்களும் செயற்படுவது அனுபவ சாத்திய மற்றது. இ. த. ஆ. சங்கத்தின் தலைமை தமிழ் ஆசிரியரிடமிருக்கிறது. ஏனைய சங்கங்களின் தலைமை சிங்கள ஆசிரியர்களிடயிருக்கின்றது.

ஒவ்வொரு இனத்தின் தனித்துவம், பேணப்பட வேண்டுமானால் மொழிவழித் தொழிற்சங்கங்கள் அவசியமாகும். இன்றைய கல்வி அமைச்சர் ஒரு சோஷலிசவாதி. தேசியத்தைப்பற்றிச் சிந்திப்பவர். ஸ்ரீ. ல. சு. கட்சியின் ஆரம்ப உறுப்பினர், ஒருமைப்பாட்டின் சங்கநாதம், இப்படியானவர் தனது இனத்திற்கு ஒரு அமைப்புவேண்டும் என்றே இஸ்லாமிய சோசலிச முன்னணியை ஆரம்பித்தார். எனவே தமிழ் மக்களின் நல னைப்பேண ஒருதொழிற் சங்

கல்முனை கல்வி வட்டாரத்தில் முஸ்லீம்களும் தமிழர்களுமே அதிகமாக வசிக்கிறார்கள். இங்கு ஏறத்தாள 82 முஸ்லீம் பாடசாலைகளும், 60 தமிழ் பாடசாலைகளும் 9 சிங்கள பாடசாலைகளும் இருக்கின்றன. இங்கு தற்போது 15 கல்வி அதிகாரிகள் கடமையாற்றுகின்றார்கள். இவர்களில் 14 பேர் முஸ்லீம்கள், ஒருவர் சிங்களவர். அறுபது தமிழ் பாடசாலைகள்உள்ள ஒருவட்டாரத்திற்கு ஒரு தமிழரேனும் நியமனம் பெறாதது எதைக் காட்டுகின்றது?

கல்வி இலாகாவை எடுத்துக்கொண்டால் முதலாம் தர நியமனத்தில் 11 அதிகாரிகள்வரை இருக்கின்றனர். இவர்களில் ஒருவராவது தமிழர் அல்லர். இப்படி எழுதினால் இது சுத்த வகுப்புவாதம் என்று கூறலாம். ஆனால் ஒரு இனத்தின் உரிமை பறிசகபபடுவதை இவர்கள் மறந்துவிட்டார்கள்.

### பற்றுக் குறை

இன்று தமிழாசிரியர்களைப பொறுத்தளவில் 20 ஆசிரியர்கள் செய்யவேண்டிய வேலையை 11 ஆசிரியர்கள் செய்கிறார்கள். முறைப்படி தமிழர்களுக்கு இன்னும் விகித நியமனங்கள் கிடைக்குமானால் எத்தனையோ தமிழாசிரியர்கள்,

தலைவர் [திரு. டீ.] எஸ். கே. வணசிங்க பேசியது எனது ஞாபகத்திற்கு வருகின்றது.

### தமிழாசிரியர் கடமை

இன்றைய இக்கட்டான நிலையில் தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்றுபட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை அமைத்திருக்கிறார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி பல திட்டங்களைத் தீட்டி போராட்ட நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. இந்த நேரத்தில் தமிழாசிரி

**ந. சிவபாதம்**

யர்கள் நாம் அரசியல் கட்சியின் பின்னணியின்றி இயங்க வேண்டுமென்று இருப்பது நியாயமற்றது.

இ. த. ஆ. சங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்து செயற்படவேண்டும் என்று தீர்மானம் மட்டுநகர் மாநாட்டிற்கு வரும்போது இதயசுத்தியுடன் இணைவதற்குத் தமிழாசிரியர்கள் முன்வரவேண்டும்.

கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும் என்று பஜனை பாடுவதை விட்டு, இனி ஒரு விதிசெய்து அதை எந்த நாளும் காப்போமாக!

## வாணியே அருள்வாய்!

ஞாலம் போற்றிடும் வாணியே — நல்ல
ஞானம் தந்தருள் வாணியே!
கானம் இசைத்திடும் வாணியே — கலைத்
தானம் சுரநதருள் வாணியே!!

பூவினில் அமர்ந்திடும் வாணியே — என்
நாவினில் எழுந்தருள் வாணியே!
ஆவியில் கலந்திடும வாணியே — என்
பாவினில நிறைந்தருள் வாணியே!!

கலையினுக் கன்னைநீ வாணியே — என்றும்
கலையுனைத் தொழுதிடும் வாணியே!
கலைஞர்கள் பணிந்திடும் வாணியே — எனக்கு
கலையினைத் தந்தருள் வாணியே!!

— ச. முருகையா

சுடர் புரட்டாதி இதழ்
CHUDAR
- காசி ஆனந்தனின் ,சிறைச்சாலை... இனிக்கும்' 'தேனடு'—கவிதை
- கோவை மகேசனின் 'தமிழக நினைவுகள்'
- கலைஞர் மு. க.வின் 'வாழ்க காக்கை வாழ்கவே' 3 சிறுகதைகள்
- கே. எஸ். ஆனந்தனின் தொடர் நாவல்
- 'அகத்தியர் செவ்வாய் வாசியா?' —ஆராய்ச்சிக்கட்டுரை
- பாலின் பயன்கள் —வைத்தியக் கட்டுரை

மற்றும் பல சிறப்பம்சங்களுடன் ஜீ. ஜீ., செல்வா ஆகியோரின் அழகான முகப போவியத்தை தாங்கி இப்போது விற்பனையாகிறது; விலை ரூபா 1-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகெலாம் பரவுகிறது!

# தமிழின் ஒளி!

**அன்பு நண்பா,**

**"எனக்கு நாலைந்து பாஷையிலே பழக்கமுண்டு; இவற்றிலே தமிழைப் போல் வலிமையும் திறமையும், உள்ளத்தொடர்பும் உள்ள பாஷை வேறொன்றுமேமில்லை; இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகில் பரவாமல் இருப்பதை நான் அறிவேன்; போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மயங்கியிருந்ததையும் நான் அறிவேன்; ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் சத்தியமில்லை; நாளை வரப்போவது சத்தியம், மிகவும் விரைவிலேயே தமிழின ஒளி உலகமுழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றியமையுங்கள்!"**

—தமிழினத்தின் புரட்சிக்கவி — புதுமைக் கவி-மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 1916ம் ஆண்டு எழுதியிருந்த 'தமிழ்' பற்றிய கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருந்த மேற்படி வார்த்தைகள் இன்றையதினம் நூற்றுக்கு நூறு உண்மையாகி வருவதையும — தமிழின் ஒளி உலகெலாம் பரவி, அதன் உயர் தனிச்செம்மையிலும் இனிமையிலும் இலக்கியச் செறிவிலும் உலகமக்கள் மயங்கி, தமிழின் தாசர்களாக மாறி வருவதையும் நாம் நிதர்சனமாகக் கண்டிடும்போது நாம் தமிழராகப் பிறந்து விட்டதை — தமிழ்த்தாயின் பிள்ளைகளாகப் பிறந்துவிட்டதை எண்ணியெண்ணி இறுமாப்பும் பெருமையுமன்றோ நமக்கு ஏற்படுகிறது!

தமிழ்மொழியின் அருமைபெருமையறியாதவர்கள்—தமிழின் சுவை தெரியா மூடர்கள —உலகம் எங்கும பரவி ஒளி வீசிடும் தமிழின் பேரொளி உணராத கசடர்கள் — கிணற்றுத்தவளைகள்போல் இங்கு தமிழை அழித்திட தமிழை நசுக்கிட திட்டம் பல போட்டாலும், சட்டம் பல தீட்டினாலும் — உலகெலாம் பரவி வரும் தமிழின் கீர்த்தியின் முன்னர், எரிச்சல் மணம்கொண்டோரின் எண்ணமெலாம்பாழாகி ஒரு நாள் தமிழ்மொழி ஈழத்தில் முடிசூடிடும்; தமிழினத்தின் கொடி உயரப்பறந்திடும் என்கிற நம்பிக்கையும், மகிழ்ச்சியும் நமக்கு ஏற்படுகிறது—வெளிநாடுகளில் தமிழுக்கு கிடைத்திடும் ஏற்றத்தையும் பெருமைகளையும் எண்ணிப் பார்த்திடும்போது!

1974ம் ஆண்டு தைத்திங்களில் பன்னாட்டறிஞர் பலர் தமிழீழத் திருநகராம் யாழ்நகரில் கூடி தமிழாய்ந்த கட்சியை — தமிழின் தொன்மையையும், பழம் பெருமையையும் எடுத்துரைத்த மாட்சியை — நாமெல்லாம் உணர்ச்சி பொங்கக் கேட்டு மகிழ்ந்திருந்த போது — அது கண்டு பொறாமைகொண்டோர் —எரிச்சல் மனத்தினர் அதிகார வெறிபிடித்து அங்கு கூடியிருந்து தமிழில் மயங்கி அதை மாந்தியபடி இருந்த தமிழர்களை கோழைத்தனமாகத் தாக்கிக் கொன்று குவித்திட்டபோதிலும்—உலகெலாம் இன்று தமிழின் ஒளிபரவி— தமிழின் சுவையில் உலக நாடுகள் மயங்கிவருவதை இந்த எத்தர்களால் ஏது செய்து தடுத்திட இயலும்?

ஆம் நண்பா, தமிழின் ஒளி — தமிழ் நாட்டின் புராதன கீர்த்தி — இன்றைக்கு 'உதய சூரியன் நாடு' என்று அழைக்கப்படும் சப்பான் நாட்டிற்கும் பரவி — அந்த நாட்டின் டோக்கியோ பல்கலைக்கழகம், தமிழ் நாட்டில் புகழோடும் பெருமையோடும் வீரத்தோடும் வரலாற்றுச் சிறப்போடும் திகழ்ந்த சோழர் காலத்து ஆட்சிமுறையைப் பற்றி அரிய ஆராய்ச்சி நூல் ஒன்றினை உருவாக்கி வெளிக்கொணரும் பெருமுயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அப்பல்கலைக்கழகத்தின் தென் ஆசிய வரலாற்றுத்துறைப்பேராசிரியர் டாக்டர் நொபுரு கராஷிமா அவர்கள் சென்னைப்பல்கலைக்கழகத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்திருக்கிறார்!

"சோழர் காலத்து ஆட்சி முறையைப் பற்றியுள்ள சுமார் 3000 கல்வெட்டுக்களை அடிப்படையாகக்கொண்டு கம்ப்யூட்டர் பொறியை பயன்படுத்தி ஆராய்ச்சி நடத்துவதில் டோக்கியோ பல்கலைக் கழகம் முயன்றுள்ளது.

"இடைக்காலச்சோழர் காலம் என்று சொல்லப்படும் காலப்பகுதியில், விசயாலயச் சோழன், ஆதித்தசோழன், பராந்தகசோழன், உத்தமசோழன், முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன், இரண்டாம் இராசராசசோழன், இரண்டாம் இராசேந்திர சோழன், முதலாம், இரண்டாம், மூன்றும் குலோத்துங்க சோழர்கள் போன்ற புகழ்மிக்க சோழர்கள் சோழநாட்டைப் புதுப்பித்தும், பெருக்கியும், வளப்படுத்தியும் வாழ்வளித்தும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவர்களில் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன, முதலாம் குலோத்துங்கன் ஆகியோர் மிகவும் சிறப்புக்குரியவர்களாகத் திகழ்ந்தவர்கள். அவர்கள் வாழ்ந்த காலந்தான் சோழநாட்டின் பொற்காலம் என்று கருதப்பட்டது.

"சோழ அரசர்களின் அருமை பெருமைகளையும, பெயர் புகழையும், வீரதீரத்தையும், ஆட்சி மாட்சியையும், சீர்சிறப்புக்களையும் தெளிவாகவும், விளக்கமாகவும் புரிந்துகொள்ளுவதற்குக் கல்வெட்டுக்கள்தாம் பெரிதும் பயன்பட்டு வருகின்றன. அவற்றில் மிகவும் சிறப்பான செய்திகளை வெளியிடும் 3000 கல்வெட்டுக்களை டோக்கியோ பல்கலைக் கழகத்தினர் தேர்ந்தெடுத்துக்கொண்டு அவற்றில் கூறப்பட்டிருக்கும செய்திகளை வகைப்படுத்திக்கொண்டு, கம்ப்பூட்டர்மூலம் ஆராய்ந்து வருகின்றனர்.

"சோழரின் ஆட்சி அமைப்பு, அதிகாரிகள் —அலுவலாளர்களின் பகுப்பு, ஊர் — கூற்றம் —கோட்டம்— மண்டலம் — நாடு என்று பிரிக்கப்பட்டிருந்த அதிகார எல்லை, வரிகளின் வகை, வரி வசூல் முறை, ஊர்சபை, சபையைத்தேர்ந்தெடுக்கும் முறை, ஊர்சபையின் உறுப்புக்கள், அறங்கூறும் அவையங்கள், அரசன மக்கள் குறைகேட்டு முறை செய்த பாங்கு போன்ற பல்வேறு செய்திகளைக் கல்வெட்டுக்களிலிருந்து தேர்ந்தெடுத்து, அடுக்கடுக்காகத் தொகுத்து வைத்துக்கொண்டு, கம்ப்யூட்டர் மூலம ஆராய்ந்து சிறந்த முடிவுகள் பலவற்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளதாக டாக்டர் நொபுரு கராஷிமா கூறியுள்ளார்.

கம்ப்யூட்டர் மூலம் பெறப்பட்ட அரிய கருத்துக்களிலேஅவர் குறிப்பிட்டுள்ளஒன்று—

"சோழர் காலம் முழுவதும் ஊர்ச்சபைகள் சுயாட்சி உரிமையோடு இயங்கிவந்திருக்கின்றன. ஆனால் சோழர் காலத்தின் இறுதிப் பகுதியில் ஊர்ச்சபையின் சுயாட்சி உரிமையை இழக்கவும், ஊர் நாட்டாண்மைக்காரர்கள் ஆதிக்கம் செலுத்தவும் ஆன நிலை ஏற்பட்டது" என்பதாகும்.

இந்திய வரலாற்றைக் குறிப்பாகத் தென்னிந்திய வரலாற்றை அறிந்துகொள்ள வேண்டும் என்பதில் ஜப்பானிய மக்கள் இப்பொழுது அதிகமான ஆர்வங்காட்டி வருகிறார்கள் என்று டாக்டர் நொபுரு கராஷிமா குறிப்பிட்டுள்ளார்.

டோக்கியோ பல்கலைக் கழகம், சோழர் காலத்துக் கல்வெட்டுக்களை கம்ப்யூட்டர் முறையில் ஆராய்ந்து நூல் எழுதுவதற்குத் தேவைப்படும் பொருளுதவியை மிட்சுபிஷி அறநிலையம் மான்யமாகக் கொடுத்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

* * *

'நண்பா, 'உதயசூரியன்' நாட்டிலிருந்து தமிழ்நாட்டின் 'பொற்காலம்' பற்றி — தமிழ் நாடு சீரோடு சிறப்போடு, கொடியோடு முடியோடு வாழ்ந்திருந்த எழுச்சிக்கோலம் பற்றி —ஆராய்ச்சி நூல் உதயமாகுவதுபற்றி மேற்கண்டமகிழ்ச்சி செய்தி கிடைத்துள்ள அதே வேளையில் ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான 'செனேகால்' நாட்டிலிருந்து செந்தமிழ் பற்றிக் கிடைத்திருக்கும் மற்றோர் செய்தியும் மனதைத் துள்ளவைக்கிறது!

**நண்பா, 1974ம் ஆண்டு தைத்திங்களில் யாழ்ப்பாணத்தில் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம்—தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்திருந்த 'செனேகால்' நாட்டு ஜனாதிபதி, தமிழகத்தின் சிற்பங்களையும், கலைகளையும் ஓவியங்களையும் தமிழின் சுவையையும் கண்டுமகிழ்ந்து அதிலே ஈடுபாடுகொண்டது மட்டுமல்ல — திராவிட மொழியான**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தமிழ்மொழிக்கும் தமது தாய்மொழியான செனகால் மொழிக்குமிடையே நெருங்கிய ஒற்றுமையும், தொடர்பும் இருக்கின்றன வென்றும் ஒருவகையில் - தாமும் திராவிட இனத்தைச் சேர்ந்தவரே என்றும் கூறி பெருமையடைந்ததையும் நீ மறந்திருக்கமாட்டாய்!

இப்போது 'செனேகால்' நாட்டின் கல்வியமைச்சர் உஸ்மானே காமரா அவர்கள் அண்மையில் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த போது—தித்திக்கும் சேதியொன்றை பின்வருமாறு செப்பியிருக்கிறார்:—

**'செனேகால்' நாட்டுப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியைக் கற்றுக்கொடுக்க தமிழ்ப் பேராசிரியர் ஒருவரை அனுப்பி வைக்குமாறு நான் இந்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளேன் இந்திய அரசும் அந்த வேண்டுகோளை நிறைவேற்றிவைக்க இசைவு தந்துள்ளது; அடுத்த திங்கள் இடைப்பகுதியில் தமிழ் மொழியைக் கற்றுக்கொடுக்கும் பணி தொடங்கப்பட்டுவிடும என்று கருதுகிறேன். செனேகால் மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்கும் சில பல வகையில் ஒற்றுமையும் உறவும் தொடர்பும் இருந்து வருவது உணரப்படுகின்றது. செனேகாலிலுள்ள அடிப்படை ஆராய்ச்சி நிலையத்திலிருக்கும் வல்லுனர்களால் இதுபற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளுவதற்கு முயற்சியெடுக்கப்பட்டிருக்கிறது"**

என்று கூறியிருக்கிறார் செனேகால் நாட்டு கல்வியமைச்சர்! செனேகால் நாட்டுக் கல்வியமைச்சரின் மேற்கண்ட அறிவிப்பினைக்கேட்டு அகமகிழ்ந்த தமிழ் நாட்டின் முன்னாள் கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் இது பற்றி பின்வருமாறு குறிப்பிட்டு மகிழ்ந்திருக்கிறார்:-

"ஈராஸ்பாதிரியார் போன்ற வரலாற்று ஆராய்ச்சிப்பேரறிஞர்கள் மனித நாகரிகத்

## அரசியல் மேடை

திற்கு அடிப்படை திராவிட நாகரிகந்தான் என்றும், கடல்கொண்ட குமரிநாட்டில்தோன்றிய அந்த நாகரிகம் தென்னிந்திய நாகரிமாகப் பரவி, பிறகு மகோஞ்சதாரோ — ஹரப்பாவின் சிந்துவெளி நாகரிகமாக வடிவெடுத்து, அதுவே பிறகு யூப்ரிடிஸ் — டைக்கிரிஸ் ஆறுகளுக்கிடையிலே வளர்ந்த சுமேரியா நாகரிகமாக மாறி, அது பிறகு அராபியா நாகரிகமாகத் தோன்றி, பிறகு எகிப்து நாகரிகமாக மிளிர்ந்து, பின்னர் கிரேக்க நாகரிகமாக ஆகி, அடுத்து உரோம நாகரிகமாக உருப்பெற்றுப் பின்னர் ஐரோப்பாக் கண்டம் முழுவதும் பரவிற்று என்றும் கூறுவர்.

"வரலாற்றுப் பேரறிஞர்களின் கருத்துக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், செனேகால் குடியரசுத் தலைவரின் கூற்று ஒருவகையில் பொருந்தி வருவதைக் காணலாம். ஆப்பிரிக்கா கண்டத்தின் நாகரிகத்திற்கு அடிப்படை, எகிப்து நாகரிகந்தான், என்பதை நடைமுறை காட்டும். எகிப்து நாகரிகம் திராவிட நாகரிகத்தோடு தொடர்புடையது என்று அறியும் போது, செனேகால் நாகரிகமும் ஒரு வகையில் திராவிட நாகரிகத்தோடு தொடர்புடையது யதுதான் என்பது தெளிவுபடும்.

"செனேகால் பல்கலைக் கழகத்தில் தமிழைக் கற்றுக்கொடுக்க முயலுவதும், செனேகால் ஆராய்ச்சி நிலையத்தில் வல்லுநர்கள் செனேகால் மொழிகளுக்கும், திராவிடமொழிகளுக்கும் உள்ள ஒற்றுமை-உறவை ஆராய்வதும் தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்ய உதவிடும் என்பதை எண்ணி நாம் மகிழலாம்.!'

* * *

நண்பா. இன்னும் இதுபோல உலகின் எத்தனையோ நாடுகளில் — எத்தனையோ பல்கலைக் கழகங்களில் தமிழின் பேரொளி பரவி வருகிறது—தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவி வருகிறது—மகிழ்ச்சிக் குரியதுதான்!

ஆனால் — இப்படிப்பட்ட செழுமை மிகு தமிழுக்கு —அந்தத் தமிழைப் பேசும் இனத்துக்கு சொந்தமானதாக ஒரு நாடு இன்று உண்டா என்ற கேள்வியெழுகிறபோதுதான்,

—6-ம் பக்கம் பார்க்க

# மனித உரிமை மீறல்!

'அம்னெஸ்டி இன்டர்நாஷனல்' என்று அழைக்கப்படும் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள தனது ஆண்டறிக்கையில் 1975-1976ம் ஆண்டுகாலப் பகுதியில் 112 நாடுகளில் மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பதாகப் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியிருக்கிறது!

மனித உரிமைகள் மீறப்படும் இந்த 112 நாடுகளில் இலங்கையையும் ஒன்ருக அது குறிப்பிட்டிருக்கிறது!

இலங்கை, இந்தியா, உட்பட உலகில் 112 நாடுகளில் அடிப்படை மனித உரிமைகளுக்கு முரணுன முறையில் பெருந்தொகையானேர் சிறைகளிலடைக்கப்பட்டு, நீதி விசாரணை மறுக்கப்பட்டும், சித்திரவதைசெய்யப்பட்டுமிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

சர்வதேச மன்னிப்புச்சபையின் இந்த அறிக்கை, மனித உரிமைகளை நேசிக்கின்ற—மனித உரிமைகள் எப்படியும் காப்பாற்றப்படவேண்டும் என்று துடிக்கின்ற—அனைவராலும் அக்கறையுடன் கவனிக்கப்படவேண்டிய ஓர் அறிக்கையாகும்.

சர்வதேச மன்னிப்புச்சபை பக்கசார்பற்ற—அரசியல் சார்பற்ற—ஓர் அனைத்துலக இயக்கம் என்பதும், எதையும் நுணுகி ஆராய்ந்து முடிவு எடுக்கும் ஓர் சபை என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டியதொன்ருகும்!

எதையும் நடுநின்று சீர்தூக்கிப் பார்த்து முடிவு செய்யும் சர்வதேச மன்னிப்புச்சபை — இலங் கயில் நடைபெறும் மனித உரிமை மீறலைப் பகிரங்கப்படுத்தி, உலக அரங்கில் இலங்கையின் 'பத்தினி' வேடத்தைக் கிழித்தெறிந்ததற்காக மனித உரிமைகளை நேசிக்கும் இலங்கைத் தமிழ் மக்கள் சார்பில் அச்சபைக்கு நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேம்!

அவசரகாலச் சட்டம் எனும் போர்வையின் கீழ் இலங்கையில் மனித உரிமைகள் புதைகுழிக்கு அனுப்பப்பட்டிருப்பதால்தான்—ஆண்டுக்கணக்காக தமிழ் இளைஞர்கள் எதுவித விசாரணையுமின்றி கொடுஞ்சிறையில் தள்ளப்பட்டுக்கிடக்கிருர்கள்!

கைதுசெய்யப்படும் தமிழ் இளைஞர்கள் பொலிசாரினுலும் இரகசியப் பொலிசாரினுலும் எவ்வளவு தூரம் கொடூரமாகவும் காட்டுமிராண்டித்தனமாகவும், மிலேச்சத்தனமாகவும் தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுவருகிருர்கள் என்பதை தேசிய அரசுப் பேரவையில் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் அப்போதைக்கப்போது பகிரங்கமாக எடுத்துக்கூறிச் சாடியிருக்கிருர்கள்!

சர்வதேச மன்னிப்புச் சபையினர் இலங்கையில் நடைபெறுவதையெல்லாம் வெறுமனே 'கேள்விப்பட்டு' இந்த அறிக்கையை அவசரப்பட்டுவிட்டுவிடவில்லை! தங்கள் பிரதிநிதியொருவரை லண்டனிலிருந்து இங்கு அனுப்பி, இங்குள்ள நிலைமைகள் யாவற்றையும் அலசி ஆராய்ந்து விசாரணையின்றி சிறையிலடைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை விடுதலைசெய்வது சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்திப்பார்த்து—தோல்வியடைந்த நிலையிலேயே இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் மனித உரிமை மீறலை அவர்கள் வேறுவழியின்றிப் பகிரங்கப்படுத்தியிருக்கிருர்கள்!

இலங்கையுட்பட உலக நாடுகள் பலவற்றில் 1948ம் ஆண்டின் மனித உரிமை சாசனம் பகிரங்கமாக மீறப்படுவதாகவும், இந்த உரிமைகளைப் பாதுகாப்பது சம்பந்தமான சர்வதேச உடன்பாடு தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை மேலும் சுட்டிக்காட்டியிருக்கிறது.

அதாவது—1948ம் ஆண்டின் மனித உரிமைப் பிரகடனம் வெறும் ஏட்டுச்சுரைக்காயாகவேயிருக்கிறது: அதை ஏற்றுக் கையெழுத்திட்டுள்ள நாடுகளே அதை மீறி வருகின்றன;மனித உரிமை சாசனம் வெறும் கேலிக்கூத்தாக்கப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை—இளைஞர்கள் விசாரணையின்றி நீண்டகாலமாகச் சிறை வைக்கப்படுவதும், சித்திரவதைக்குட்படுத்தப்படுவதுமட்டுமல்ல — மனித உரிமை சாசனத்திலிடம்பெற்றுள்ள அத்தனைவிதிகளுமே புறக்கணிக்கப்பட்டு, புதைகுழிக்கு அனுப்பப்பட்டுவிட்டன! மனித உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்ட நிலையில்—இந்நாட்டு மக்கள்—குறிப்பாகத் தமிழ் மக்கள்—இன்றைக்கு அடக்குமுறையின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவிக்கிருர்கள்!

மனித உரிமைகள் மீறப்படுவதுதான், உலக நாடுகள் பலவற்றில், அந்த நாடு பிரிவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்திருப்பது கண்கூடு. ஐ. நா. வினுல் நிறைவேற்றப்பட்டு இலங்கையுட்பட அதன் அங்கத்துவ நாடுகளினுல் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகளும்—சுயநிர்ணய உரிமைத்தத்துவமும் புதைகுழிக்கு அனுப்பப்பட்ட காணத்தினுலேதான் இன்று இலங்கையிலும் தமிழ் தேசிய இனம் பிரிவினை கோரிக் கிளர்ச்சியிலீடுபட்டிருக்கிறது!

மனித உரிமைகள் சாசனத்துக்கு உயிர் கொடுத்திட ஐ. நா. சபை ஏதாவது உருப்படியான நடவடிக்கையெடுக்காவிடின் அச்சபை இருந்தும் உலக மக்களுக்கு அதனுல் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை.

# இடைபுகும் மனுவை ஆதரித்து புள்ளைநாயகம் சட்டவாதம்

—1-ம் பக்கத்தொடர்

திருவாளர்கள் வி. என். நவரத்தினம் பா. உ, திரு. க. துரைரத்தினம் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ. ஆகிய மூவரும் உயர் நீதிமன்றம் இந்த வழக்கில் எடுக்கவிருக்கும் முடிவு தங்கள் மூவருக்கும் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதென்றும், அதனுல் தங்கள் சுதந்திரம் பாதிக்கப்படலாமென்றும், இத்தகைய காரணங்களினுல் இந்த வழக்கில் தம்மையும் ஐந்தாவது பிரதிவாதிகளாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் தனித்தனியாக மூன்று மனுக்களை உயர்நீதிமன்றத்துக்கு தாக்கல் செய்திருந்தார்கள்.

## தமிழ்தேசிய உடையில் அமிர்

30-9-76 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு, உயர் நீதிமன்றத்தில் பிரதமநீதியரசர் திரு. விக்டர் தென்னக்கோன், திரு. ஜி. டி. சமரவிக்கிரமா, திரு. வி. ரி. தாமோதரம், திரு. நொயல் தித்தவல, திரு. டபிள்யூ. டி. குணசேகரா ஆகிய ஐந்து உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில், இந்த மீளாய்வு—'றிட்' — மீதான பூர்வாங்க விசாரணை தொடங்கியது.

நீதிமன்றத்திற்கு திரு அமிர்தலிங்கம் தமிழ்தேசிய உடையுடன் வந்திருந்தார். திரு. க. துரைரத்தினம், பண்டிதர் இரத்தினம் ஆகியோரும் வந்திருந்தனர்.

உயர்நீதி மன்றத்தில் முதன்முதலாக கூட்டணி பா. உ.க்கள் மூவரும் கொடுத்திருந்த 'இடைபுகும் மனு (Notice of Intervention) விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சட்டத்தரணி திரு. எச். டி. தம்பையா எழுந்து திரு. வி. என். நவரத்தினம் சார்பில் ஆஜராகவிருக்கும் திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தன நீதிமன்றத்துக்கு வரமுடியாததால், இந்த மனுவை அடுத்த தடவை எடுக்க வேண்டுமென்று விண்ணப்பித்தார்.

பிரதம நீதியரசர் அப்போது குறுக்கிட்டு, மற்ற இருவரது சட்டத்தரணிகளும் தயாராக இருந்தால், இன்றே அதுபற்றி ஒரு முடிவுக்கு வந்துவிடலாமென்ருர்.

## புள்ளைநாயகம் வாதம்

இதையடுத்து பண்டிதர் கா. பொ. இரத்தினம் சார்பில் ஆஜராகியிருந்த முன்னுள் உதவி சொலிசிட்டர் ஜெனரல் திரு. வி. எஸ். ஏ. புள்ளைநாயகம், இடைபுகும் மனுவை ஆதரித்துப் பேசினுர். உயர் நீதிமன்றம், ட்ரயல்—அற்—பார் நீதிமன்றத்தின் தீர்ப்புமீது அளிக்கவிருக்கின்ற முடிவு, இதே வழக்குடன் சம்பந்தப்பட்டு, ஏற்கெனவே குற்றப் பத்திரிகை வழங்கப்பட்டிருக்கும் ஏனைய மூவரையும் பாதிக்கும் என்பதாலும், அவர்கள் தமது சுதந்திரத்தையும், சொத்துரிமைகளையும் இழக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதாலும், அவர்கள் மூவருக்கும் நீதி [illegible]

[illegible] களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று தாம் கோருவதாக திரு. புள்ளைநாயகம் எடுத்துரைத்தார். அத்துடன் இது சம்பந்தமாக பல தீர்க்கப்பட்ட வழக்குகளிலிருந்தும் திரு. புள்ளைநாயகம் மேற்கோள் காட்டி வாதித்தார்.

நான்காவது பிரதிவாதி திரு. அமிர்தலிங்கத்தின் சார்பில் ஆஜராகிய திரு. எம். திருச்செல்வம் கியூ. சி. யும் திரு. புள்ளைநாயகத்தின் கருத்துக்களை ஆதரித்துப் பேசினர்.

கூட்டணி பா. உ.க்கள் மூவரையும் பிரதிவாதிகளாக சேர்ப்பது காலத்தை வீணே நீட்டிச்செல்வதாகும் என்று கூறி அந்தக் கோரிக்கைக்கு சட்ட மாஅதிபர் திரு. சிவாபசுபதி எதிர்ப்பு தெரிவித்தார்.

இச்சமயத்தில் குறுக்கிட்டு கருத்துக்கூறிய நீதியரசர் திரு. தாமோதரம், இடைபுகும் மனுவை ஏற்க மறுப்பது, மனுதார்களது உரிமையை மறுப்பதாக அமைந்துவிடுமென்று தெரிவித்தார்.

பிரதம நீதியரசர்: (திருச்செல்வத்திடம்) டரயல்—அற் — பார் நீதிமன்றத் தீர்ப்பு உங்களுக்குச் சாதகமாக இருக்கும்போது பிரதிவாதிகளாகிய உங்களுக்கு அதிகநேரம் எடுக்கவேண்டியதில்லையே!

இதன்பின்னர், பிரதம நீதியரசர், இந்த வழக்கில் திருவாளர்கள் வி. என். நவரத்தினம், க. துரைரத்தினம் பண்டிதர் இரத்தினம் ஆகியோரை. இடைபுகும் மனுதார்களாகச் சேர்க்காமல் — அதே சமயம், ஒவ்வொரு மனுதார் சார்பிலும், ஒவ்வொரு சட்டத்தரணியை ஒரு குறிக்கப்பட்ட நேரம் தமது கருத்தை வெளியிடுவதற்கு அனுமதிக்கலாமென்றும், அதுபற்றி சட்டமா அதிபரின் கருத்தென்னவென்றும் கேட்டார்.

சட்டமா அதிபர் இதற்கு எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. இதைத் தொடர்ந்து பிரதம நீதியரசரின் இந்த யோசனையை திரு. வி. எஸ், ஏ. புள்ளைநாயகமும் திரு. மு. திருச்செல்வமும் ஏற்றுக்கொள்வதாக அறிவித்தனர்.

இதைத்தொடர்ந்து 13ம் திகதி விசாரணை தொடங்கும் என்று அறிவிக்கப்பட்ட பொழுது மீளாய்வு விசாரணையைமுதலில் எடுப்பதா? அல்லது 'றிட்' மீது விசாரணையை எடுப்பதா? என்ற பிரச்சினை கிளப்பப்பட்டது. மீளாய்வு விசாரணையைத்தான் முதலில் எடுக்க வேண்டுமென்று சட்டமா அதிபரும், இருவிசாரணையையும் ஒன்ருக எடுக்கவேண்டுமென்று திருச்செல்வமும் கோரினர்.

இறுதியில் இது சம்பந்தமான தமது ஆட்சேபனைகளை 13-10-76ம் திகதிக்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் பிரதிவாதிகள் உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கலாம் என்று தெரிவித்து, விசாரணையை 13ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்கள் உயர் நீதிமன்ற நீதிபதிகள்.

தமது சுகவீனம் காரணமாக நீதிமன்றத்துக்கு வரமுடியாத நிலையில் இருப்பதாக திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அனுப்பியிருந்த தந்தியும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

மூதறிஞர் செல்வா, தலையில் காயத்துக்கு "பிளாஸ்திரி" போடப்பட்ட நிலையில் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார்.

## உயர் நீதிமன்றத்தில் ஆஜராகும் சட்டத்தரணிகள்:

மீளாய்வு மனுமீது: திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ. சி., எம். திருச்செல்வம் கியூ. சி., ஏ. மகேந்திரராசா, கே. தேவராஜா, எம். சிவராசசிங்கம், (ஆர். பாலசுப்பிரமணியத்தின் அனுசரணையுடன்)

றிட் மனுமீது: எம். திருச்செல்வம் கியூ. சி., ஜே. ஏ. செருபின், கே. கனகஈஸ்வரன், ஜீ. ஜீ. பொன்னம்பலம் (யூனியர்) ஏ. மகேந்திரன், எஸ். உருத்திரமூர்த்தி, திருமதி எஸ். ஞானகரன், (ஆர். பாலசுப்பிரமணியத்தின் அனுசரணையுடன்)

இடைபுகும் மனுமீது வி. என். நவரத்தினம் சார்பில்: எச். டபிள்யூ. ஜெயவர்த்தன, எச். டி. தம்பையா, டாக்டர் என். திருச்செல்வம், சி றத்துவத்தை (ஆர். பாலசுப்பிரமணியத்தின் அனுசரணையுடன்)

கே. பி. இரத்தினம் சார்பில்: முன்னுள் சொலிசிட்டர் ஜெனரல வி. எஸ். ஏ. புள்ளைநாயகம், எஸ். ஸி. சந்திரகாசன், எம். வை. எம். பெயிஸ், (ஆர். பாலசுப்பிரமணியத்தின் அனுசரணையுடன்)

க. துரைரத்தினம் சார்பில்: கே. கனக-ஈஸ்வரன், டாக்டர் நீலன் திருச்செல்வம், செல்வி புறாடி, (ஆர். பாலசுபபிரமணியத்தின் அனுசரணையுடன்)

## திருமண நன்றி அறிவித்தல்!

நாகநாதன் இலங்கை — சூரியகுமாரி திருமணத்தின்போது நேரடியாக கலந்துகொண்ட சகல உறவினர்க்கும், நண்பர்களுக்கும், வாழ்த்துச் செய்திகளும் பரிசுப் பொருட்களும் அனுப்பியோருக்கும் மணமக்களும் அவர்களது பெற்றேரும் தமது நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு — ஒவ்வொருவருக்கும் தனித்தனியே நன்றி தெரிவிக்க இயலாமைக்கு வருத்தமும் தெரிவிக்கின்றனர். (26, அல்பிறட் பிளேஸ், கொழும்பு-3.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் தொகுதியெங்கும் எழுச்சிக்கோலம்!

## இரு நாட்கள் நடைபெற்ற இயக்கப் பணிகள்!

சென்ற 25, 26ம் திகதிகளில் மன்னார் நகரம், பேசாலை, தாழ்வுபாடு, அடம்பன் ஆகிய இடங்களில் எழுச்சியும், உணர்ச்சியும் மிக்க தமிழர் விடுதலைக் கூட்டணிக் கருத்தரங்குகளும், தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவைக் கிளை அமைப்பு வேலைகளும் நடைபெற்றன.

### மன்னார்

மன்னார் நகரத்தில் திரு. ஜோன் மார்க் இல்லத்தில, 25ம் திகதி மாலை தமிழ் மகளிர் பேரவை அமைப்புச் செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் தலைமையில் மகளிர் பேரவைக் கிளை அமைக்கப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கில், நாவலர் அ. அமிர்தலிங்கம், மட்டுநகர் முதல்வர் செ. இராசதுரை, திரு. செல்லத்தம்பு பா. உ. திரு. துரைரத்தினம் பா. உ. திரு. ஆனந்தசங்கரி பா. உ. தமிழ் இளைஞர் பேரவை இடைக்கால அமைப்பாளர் திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன், பருத்தித்துறை இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. கனக-மனோகரன், அடம்பன் கிராமசபைத்தலைவர் திரு. செபமாலை ஆகியோர் உரையாற்றினார்கள். இதைத் தொடர்ந்து தமிழ் இளைஞர் பேரவை இடைக்கால அமைப்பாளர் திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரனின் மேற்பார்வையில் தமிழர் விடுதலைக் கூட்டணியாலும், தமிழ் இளைஞர் பேரவையாலும் மன்னார் தொகுதி இளைஞர் பேரவை முழுநேர அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. ஜெயராசாவின் தலைமையில் மன்னார் இளைஞர் பேரவைக் கிளையும் நிறுவப்பட்டது.

### பேசாலை

25ம் திகதி இரவு பேசாலையில், பேசாலை தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. அருள் சீலன் பர்ணாண்டோவின் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் நாவலர் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. இராஜதுரை பா. உ. முன்னாள் மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம், திரு. செல்லத்தம்பு பா. உ., திரு. ஆனந்தசங்கரி பா. உ. திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திரு. துரைரத்தினம் பா. உ., திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன், திரு. அல்லைபச்சேக் ஆகியோர் உரையாற்றினர். இரவு பதினொரு மணிவரை நடைபெற்ற இக்கருத்தரங்கின் இறுதியில் திரு. மாட்டின் நன்றியுரை கூறினார்.

### தாழ்வுபாடு

26-9-76 காலை 8 மணியளவில் தாழ்வுபாடு கிராமத்தில் திரு. ச. சந்தன் பெரேராவின் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் நாவலர் அ. அமிர்தலிங்கம், திரு. செல்லத்தம்பு பா. உ., திரு. ஆனந்தசங்கரி பா. உ., திரு. துரைரத்தினம் பா. உ., திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம். திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் திரு. கனக-மனோகரன் ஆகியோர் உரையாற்றினர். இக்கருத்தரங்கின் முடிவில் தமிழ் மகளிர் பேரவைக் கிளையும், தமிழ் இளைஞர் பேரவைக் கிளையும் அமைக்கப்பட்டன. திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் தமிழீழ தேசிய கீதத்துடன் கருத்தரங்கு முடிவுற்றது.

### அடம்பன்

26-9-76ந் திகதி த. வி. கூட்டணிக் கருத்தரங்கு காலை 10.30 மணியளவில் அடம்பனில் நடைபெற்றது இக்கருத்தரங்கை மன்னார் த. இ. பே. ஒழுங்கு செய்திருந்தது.

த. வி. கூட்டணிட் பிரமுகரான மாந்தை வடக்கு கி. ச. தலைவர் திரு. செபமாலை, வருகை தந்த தலைவர்களையும் மற்றையோரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். தமது உரையின் போது "கூட்டணித் தலைவர்கள் எதிர்காலத்தில் அடிக்கடி இப்பகுதிகு வருகைதந்து கருத்தரங்குகளில் பங்கு கொண்டு எமது ஐயங்களைப் போக்க உதவவேண்டும்'' என்றார்.

அடுத்ததாக உரைநிகழ்த்திய வவுனியா தே. பே. உ. திரு. செலலத்தம்பு 'மாதோட்டத்தில் தமிழரின் ஆட்சி சரித்திரகாலததுக்கு முன்பிருந்தே நிலவி வந்தது' என்ரா. பல சரித்திர ஆதாரங்களை எடுத்துக்காட்டினார், தமது கூற்றுக்கு ஆதாரமாக. "இப்பகுதியில் ஒற்றுமையாக வாழும் இந்து கிறீஸ்தவ மக்களிடையே சமய பேதங்களைக் கிளறிவிட்டு இன்றுள்ள ஒற்றுமையைக் கலைக்கச் 'சிலர்' முனைந்துள்ளார்கள். அவர்களையிட்டு நீங்கள் அனைவரும் விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருந்து தமிழரின் ஒறறுமையைப் பேணிப் பாதுகாத்து வளர்க்க வேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார்!

அடுத்து உரையாற்றிய கிளிநொச்சி தே. பே. உ. திரு. ஆனந்தசங்கரி, 'இன்று ஆட்சியாளர்களால் தமிழினம் பல்வேறு துறைகளிலும் ஒதுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு வருகிறார்கள்' என்றார். இதனைப் பல ஆதாரங்களுடன் எடுத்து விளக்கிய அவர், 'எமது தமிழ் மக்களின் திறமை நசுக்கப்படுகின்றது. எனவே எமது விடுதலையை வென்றெடுக்க; எமது தமிழ் மண்ணைக் காக்க; எமது மொழியைக் காக்க நம்மிடையே ஒற்றுமை வேண்டும். தமிழினம் ஆண்ட மண்ணை மீண்டும் மீட்டு ஆள வேண்டும்'' என வலியுறுத்தினார்!

த. வி. கூட்டணிப் பிரமுகரான திரு. கனக. மனோகரன் தமது உரையின் போது, "விடுதலைப் போராட்டத்துக்கு ஒற்றுமையே வேண்டும்,'' என்றார்.

த. இ. பே. அமைப்பாளரான திரு. ரகுபதி பால "ஸ்ரீதரன்" பேசும்போது தேர்தல் எமது நோக்கமல்ல; தமிழீழமே எமது முடிந்த முடிபு''என்ற அவர், "இந்த விடுதலைப் போராட்டத்தில் பங்குகொள்ள வீட்டுக்கு ஒரு வீரன் முன் வர வேண்டும் என அழைத்தார்! "போராட்டத்தில் ஈடுபடும் ஆண்களைத் தடைசெய்யாது அவர்களைத் தட்டிக்கொடுங்கள்'' எனப் பெருந்திரளாகக் கூடிஇருந்த தாய்க்குலத்தினரை வேண்டிக் கொண்டார்!

பருத்தித்துறை தே. பே. உறுப்பினர் திரு. துரைரத்தினம் தமது சொற்பெருக்கின் போது, "விடுதலை வேட்கை கொண்டுவிட்ட தமிழினத்தை எவரும்தடை செய்ய முடியாது. விடுதலை விரும்பிகளுக்கு பாலமும் பள்ளிக்கூடமும் முக்கியமில்லை. முதலில் விடுதலை பெறவேண்டும். அதன் பின்பே பாலமும் பள்ளிக்கூடமும் தேவை'' என்றார்.

தமிழ்ப் பற்றுமிக்குடைய அடம்பன் கட்டளைக்குரவர் வண. பிதா தேவதாசன் அடிகளார் தமது அருளுரையின் போது 'த. வி. கூட்டணியின் கொள்கைகள் கிராமங்கள் தோறும், பட்டிதொட்டிகளிலெல்லாம் மேலும் நன்கு பரப்பப்பட வேண்டும். அப்போதுதான் தமிழ்ப் பற்று; தமிழ் இனப்பற்று; விடுதலை வேட்கை சாதாரண மக்களின் உள்ளங்களில் பற்றிப் படர்ந்து வளரும் என்றார்! மேலும் அவர் தமது சொற்பொழிவின் போது "நாம் தமிழர்கள்; நாம் தமிழ்த்தாயின் மக்கள். இந்த எண்ணத்தை — ஒற்றுமையை — சாதிமத வேறுபாடுகள் அடித்துச் செல்லாது பேணி வளர்க்க வேண்டும்'' என அனைவரையும் கேட்டுக்கொண்டார்!

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், அவையில் கூடியிருந்த தாய்க்குலத்தினரை "தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் தங்கள் உடன் பிறப்பினரையோ துணைவரையோ தடை செய்ய வேண்டாம்; அதற்குப்பதிலாக அவர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்துங்கள்'' என உருக்கமாக வேண்டிக்கொண்டார்.

தானைத் தளபதி திரு. அமிர்தலிங்கம் தமது உணர்ச்சி மிகு வீர உரையின் போது "தமிழ்ப் பேசும் மக்களிடையே இன்னமும் குற்றுயிராக உள்ள பிரதேச வேறுபாடுகளை ஒழிக்கவேண்டும்; சாதி சமய வேறுபாடுகள் மறையவேண்டும். சாதிக்காகத் தமிழனை தமிழன் கொல்லும் நிலை மாறித் தமிழனைக் கொல்லும் சிங்களத்தைக் கொல்ல ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் புறப்படவேண்டும். என அறை கூவினார்! மேலும் பேசும்போது "தமிழ் அரசு மதச் சார்பற்ற; ஆனல் மதச் சுதந்திரமுள்ள ஆட்சியாக அமையும். சுரண்டல்கள் ஒழிக்கப்பட்டுவிடும்; பிரதேச வேறுபாடுகளை வளர்க்கும் நஞ்சர்களையிட்டு மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எதற்கும் தயாரான பத்து இளைஞர்கள் ஒவ்வொரு கிராமம் தோறும் விடுதலைப்போராட்டத்தில் பங்குகொள்ள முன்வரவேண்டும். எம்மிடையே உட்பகை இருக்கலாகாது: எம்மிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமை மென் மேலும் பலப்படவேண்டும். சுதந்திரம் வேண்டும் நாங்கள் எந்தவிதத் தியாகத்திற்கும் ஆயத்தமாக இருக்க வேண்டும். அழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்; என்றார்!

திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், கவிஞர் காசிஆனந்தனின் "தங்கமாமணித் தமிழீழம்'' என்ற பாடலை உணர்ச்சி பொங்கப் பாடினார்!

தலைவரின் நன்றியுரையுடன் கருத்தரங்கு நிறைவுற்றது.

இதன் பின்னர் அடம்பன் பிரிவுக்குத் த. இ. பேரவை த. ம. பேரவைக் கிளைகள் தொடக்கி வைக்கப்பட்டன.

—தொகுப்பு: ரகு, முருகு

# காந்தி தினத்தில் சட்டமறுப்பு! தொண்டர்களுக்கு 9கட்டளைகள்

2-10-76 காந்தி ஜெயந்தி தினம் அன்று தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கும் சட்ட மறுப்பு இயக்கத்தையொட்டி கூட்டணியின் போராட்டக் குழு கூட்டணித் தொண்டர்களுக்கு விதித்திருக்கும் கட்டுப்பாடுகள வருமாறு:—

(1) அகிம்சையில் நம்பிக்கையுடையவர்கள் மட்டுமே இதில் பங்குபற்றலாம்.

(2) பிரிவினை பற்றியும் புதிய அரசியலமைப்பு பற்றியும் உள்ள அவசரகாலச் சட்டவிதிகளை இச் சட்ட மறுப்பு இயக்கம் மீறுவதாகும். இன்னும் எங்கள் நீதியையும் நியாயத்தையும் சிங்களத் தலைவர்களுக்கு கூறுவதாகும்,

(3) சிறைவாசம், சொத்துப்பறிமுதல் முதலிய தண்டனைகளை ஆட்சேபனையின்றி ஏற்கவேண்டும்.

(4) சட்டமறுப்புக் கடிதத்தில் ஒப்பம், பெயர், முகவரி அன்றி வேறு எதுவும் எழுதக் கூடாது.

(5) அரசியல், நிர்வாக சமய, சமுதாய சிங்களத் தலைவர்களுக்கும் உள்ளூர் ஆட்சி மன்ற, இணக்கசபை, மக்கள் குழு, சிங்கள அங்கத்தவர்கட்கும் அனுப்பலாம். சிங்களப் பிரமுகர்கள் அல்லாதவர்களுக்கு அனுப்ப வேண்டாம்.

(6) 15 சத முத்திரையுடன் சாதாரண தபாலில் அனுப்பவும்.

(7) கடித உறைமேல் பெயரும் முகவரியும்மட்டும் தெளிவாக எழுதவேண்டும். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏதாவது ஒன்றில் எழுதலாம்.

(8) பங்குபற்றிய சத்தியாக்கிரகிகளின் பெயரும் விலாசமும் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

(9) கீழ்வரும் மாவட்டங்களிலிருந்து எதிரே குறிக்கப்படும் மாவட்டங்களுக்கு பிரசுரம் அனுப்பப்படவேண்டும்.

யாழ்ப்பாணம் — கொழும்பும் மேற்கு மாகாணமும்

திருகோணமலை — கண்டி, மத்தியமாகாணம்.

மட்டக்களப்பு — தெற்கு மாகாணம், ஊவாமாகாணம்

மன்னார் — வடமத்திய மாகாணம்.

வவுனியா — வடமேற்கு மாகாணம்.

அம்பாறை — சப்பிரகமுவ மாகாணம்.

மேற்படி ஒழுங்கிற்கு புறநடையாக அனுமதிபெற்றும் அனுப்பலாம்.

## பரந்தனில் சீட்டிழுப்பு

அண்மையில் பரந்தனில் ஆரம்பிக்கப்பட்ட ஈழத்தமிழர் பொருளாதார அபிவிருத்திச் சங்கம் அதிட்டலாபச் சீட்டிழுப்பு ஒன்றை நடத்தவுள்ளது. பரந்தனில் கைத்தொழில் நிலையங்கள் அமைப்பதற்கான நிதிக்கு இச்சீட்டிழுப்பு நடைபெறுகிறது: 1-ம் பரிசாக புதிய நீர் இறைக்கும் இயந்திரம் 2-ம் பரிசாக புதிய துவிச்சக்கரவண்டியும் 3-ம் பரிசாக புதிய 'பெற்றோமாக்ஸ்' லைட்டும் மற்றும் (100/-) ரூபா பெறுமதி வாய்ந்த 15 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவிருக்கின்றன.

பரந்தன் சிவன் ஆலய முன்றலில் 27-11-76 சனி [illegible]

முக்கிய அறிவித்தல்

மில்க்வைற் உற்பத்திப் பொருட்களின் மேலுறைகளுக்குப் பரிசுகளைப் பெற விரும்புவோர் கீழ் குறிப்பிட்ட விலாசத்தின்படி அனுப்பிவைக்கவும்.

விளம்பரப்பகுதி:

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண் 77 யாழ்ப்பாணம்.

## ரூபாநோட்டுக...

—1-ம் பக்கத் தொடர்

அண்மையில் இத்தகைய ரூபா நோட்டுக்களை பெற்றுசொண்ட சிங்களப் பிரமுகர்கள் சிலர், இதை என்ன செய்யலாம் என்று மத்திய வங்கியிடம் ஆலோசனை கோரியபோது — அப்படி எழுதப்பட்ட நோட்டுக்களை செல்லாததாக கருதும்படி கூறப்பட்டதாம். இதனால் சிங்கள பிரமுகர்கள் பலர் பெரும் பாதிப்புக்குள்ளாகியதாக தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டாமையொழிப்பு தீவிரமடையட்டும்!

உலகில் தனக்கெனத்தனி முடியோடு கொடியோடு சீரோடுசிறப்போடு,சிறபான இலக்கியங்கள் பல படைத்து அவனிமெச்சிட வாழ்ந்த தமிழினம், சிதைந்து சீரழிந்து சின்னாபின்னப்பட்டு அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டு இன்று அவதியுறும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதற்கு காரணிகள் பலவெனினும் — அவற்றுள் முதன்மையானது தமிழ் மக்களைக் கூறுபோட்டு பிளவுபடுத்தும் சாதியமைப்பும் அதிலிருந்து எழுந்த தீண்டாமையென்னும் தீய கொள்கையும்தான் என்று கூறினால் அதை எவராலும் மறுக்கமுடியாது!

சாதியமைப்பும், தீண்டாமையும் தமிழினத்திற்குள் என்று புகுந்ததோ — அன்று முதல் தமிழ் சமுதாயததின் சீரான வாழ்வும் வீழ்ச்சியுறத் தொடங்கிவிட்டது!

இதை உணர்ந்துதான் 27 ஆண்டுகளுக்கு முன்னர் — இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தபோதே— அதன் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சாதியையும் தீண்டாமையையும் ஒழித்துக்கட்டி தமிழனத்தை ஒன்று திரட்டினால் மட்டுமே தமிழ் சமுதாயம் அரசியல் சுதந்திரம் பெறமுடியும் என்று மூதறிஞர் தந்தை செல்வா அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்தார்; தமிழரசுக்கட்சியின் அடிப்படைக் கொள்கையில் ஒன்றாக சாதியொழிப்பும் சேர்க்கப்பட்டது!

கடந்த 27 ஆண்டுகளாக தமிழினத்தின் அரசியல் உரிமைகளுக்காக தமிழரசுக் கட்சி பல்வேறு போராட்டங்களை ஒருபுறம் நடத்தி வந்தாலும் — மறுபுறம் தீண்டாமை யொழிப்புக்காகவும் சாதியொழிப்புக்காகவும் எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்துவந்ததை நாடறியும்! தமிழரசுக் கட்சித்தலைவர்களின் சமூக சீர்திருத்த பிரசாரங்களினாலும் —இயக்கங்களினாலும் தமிழ் ஈழத்தில் தீணடாமை ஆட்டங் காணத்தொடங்கியது!

பல ஆலயக்கதவுகள் அனைவருக்கும் திறக்கப்பட்டதும் —தேநீர் சாலைகள் உணவு விடுதிகள், முடிதிருத்தும் நிலையங்கள் போன்ற பல பொது நிலையங்களில் தீண்டாமையொழிக்கப்பட்டதும்—தீண்டாமை பாராட்டுவதை தண்டனைக்குரிய குற்றமாக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டதும் — தீண்டாமையொழிப்பு பாதயாத்திரைகளையும், சமபந்தி போசனங்களையும் நடத்தி மக்கள் மத்தியில் மனமாற்றத்தை வளர்த்ததும் — தீண்டாமை பாராட்டிய உயர்சாதியினர் என்று கூறப்படுவோர் தண்டிக்கப்பட்டதும்—சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதியொருவர் மூதவையில் உறுப்பினராக்கப்பட்டதும் தமிழரசுக்கட்சியின இயக்கங்களினால் விளைந்த பயன்களே!

ஆனால், இத்தனையும் நடந்தும்கூட தீண்டாமையும், சாதியும் இன்னும் வேரோடு கெல்லியெறியப்படவில்லை; தமிழ்ப்பகுதியில் பல இடங்களில் இன்னும் அது தனது கோர வெறியை அடிக்கடி காட்டிவருவது வேதனைக்குரிய உண்மையாகும், அரசியல் சட்டத்தின் மூலம்தீண்டாமை பாராட்டுவதைசட்டவிரோதமாக்கும்படி தமிழரசுக் கட்சியும் தமிழர் கூட்டணியும் சிங்கள அரசுக்கு இடித்துரைத்தும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது!

சட்டத்தை ஆக்குகின்ற அதிகாரம் தமிழர் விடுதலைக கூட்டணியிடம் வருமானால் —அதாவது உருவாகப்போகும் தமிழ் ஈழத்தில் —சாதி அழிக்கப்பட்டு தீண்டாமை என்ற கொடிய முறையும் பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் நிலையும் வேரோடு களையப்பட்டு எந்த உருவத்திலும் அவற்றை அனுட்டிப்பது சட்டத்தின்மூலம தண்டிக்கப்படும் என்று வட்டுக் கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டணியின் கொள்கைப் பிரகடனத்தில் தெட்டத்தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

அதேசமயம் சாதியொழிப்புககாக தமிழ்ஈழம் மலரும் வரை காத்திராமல் — தமிழீழ சுதந்திரப் போராட்டம் ஒருபுறம் நடைபெறும் அதே சமயம் தீண்டாமையை வேரோடுகளைந்து தமிழின ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்காக உடுபபிட்டி பா. உ. திரு. க. ஜெயக்கொடியின் தலைமையில் ஓர் குழுவையும் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு நியமித்தது.

இரு மாதங்களை தீண்டாமையொழிப்பு மாதங்களாகப் பிரகடனப்படுத்தி, தீண்டாமை யொழிப்பு நடவடிக்கைளை தீவிரப்படுத்துவதென்றும் அந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

மாநாடு முடிந்து நான்கு மாதங்களாகியும் தீண்டாமை யொழிப்புக்குழு தீவிரமாக இயங்கத் தொடங்காதது கண்டு வேதனையடைந்திருந்த நமக்கு, இப்போது இக்குழு கொஞ்சமாவது இயங்கத் தொடங்கியிருப்பது மகிழ்சசியை அளிக்கிறது.

தமிழ்ஈழத்தில் சாதியின் பெயரில் அமைந்துள்ள ஊர்களின்—வீதிகளின் — பெயர்களை மாற்றும் நடவடிக்கையில் இக்குழு முதன்முதலாக ஈடுபடவிருப்பதுடன், சாதிப் பாகுபாடு கடைப்பிடிககப்படும் கோவில்கள்,தேநீர் கடைகள் மற்றும்பொது நிலையங்களிலிருந்து அதை ஒழித்துக்கட்டப்போவதாக அறிவித்திருப்பது வரவேற்கத்தக்க தாகும்!

கலப்புத்திருமணங்களை ஊக்குவித்து— கலப்புத் திருமணம் செய்வோருக்குப் பரிசு வழங்கும் திட்டத்தையும் இக்குழு ஆராயவேண்டும்!

சாதியொழிப்பு —தீண்டாமையொழிடபு இயக்கங்களை அரசியல் பிரச்சினையாக்காது, சமூக சீர்திருத்த இயக்கமாக கொண்டு நடத்துவதென்று இக்குழு எடுத்திருக்கும்முடிவு புத்திசாலித்தனமானதே!

சாதியொழிப்பிலும் தீண்டாமையொழிப்பிலும் நாம் வெற்றியீட்டி விட்டோமானால், —தமிழின ஒருமைப்பாட்டை உருவாக்கிவிட்டோமானால் விடுதலைப் பயணத்தில் பாதி வழியைத் தாண்டியவர்களாவோம்!

—எழுத்துவேந்தன்

## அரசியல் மடல்....

—3-ம் பக்கத் தொடர்

உலகத் தமிழன் வெட்கத்தால் கூனிக்குறுக வேண்டிய நிலையிலுள்ளான்!

உலகத்தின் பழம்பெரும் மொழியான தமிழையும் — கிரேக்க, உரோம நாகரிகங்களுக்கு முற்பட்ட உலக நாகரிகத்தின் தொட்டிலான தொன்மைமிகு திராவிட நாகரிகத்தையும்—சொந்தமாகக்கொண்டுள்ள நாம்— நேற்று முளைத்தெழுந்த — இலக்கிய இலக்கண மற்றமொழிகளைப்பேசும் இனங்கள் எல்லாம் தன்னாட்சி பெற்று தனிநாடுகளாக தரணிமெச்ச தலை நிமிர்ந்து வாழ்ந்திடும்போது — நமக்கெனோர் நாடு ஏன் இல்லை? என்ற கேள்வி தமிழன் ஒவ்வொருவனது நெஞ்சையும் குத்திக் குடையவேண்டும்!

ஆம் அந்த இழி நிலையை — தமிழன் தனக்கென சொநதமான நாடற்றவன் எனும் நிலையை — துடைத்தெறியக்கூடிய அருமையான வாய்ப்பை காலமகள் ஈழத் தமிழனின் கரங்களிலேதான் இன்று ஒப்படைத்திருக்கிறாள்! தமிழ்த்தாய் தனது முதலாவது சிம்மாசனத்தை தமிழ்ஈழ நாட்டிலேதான் எதிர்பார்க்கிறாள்! உலகத்தின் முதலாவது தமிழ்நாடு — தமிழ்ஈழமாக அமையட்டும்! தமிழ்ஈழம் அமைக்கின்ற புனிதப் பணிக்கு நம் உடல்,பொருள், ஆவியை அர்ப்பணிப்போம்! அழிவதில் இப்பணிக்கழிவதே பெருமை!

உன் அன்புத் தோழன்.

கோவை-மகேசன்


இதோ வெளிவந்துவிட்டது!

**சுஜிகலாவின்**

**தீபாவளி வாழ்த்து மடல்கள்**

மனதைக் கவரும் கருத்துக்கள்!

கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்கள் பலப்பல!

வாழ்த்துக்களெல்லாம்கவருடன்விலைகுறிப்பிடப்பட்டுள்ளன

| | அளவு | 100க்கு | டசின் |
|---|---|---|---|
| நிர். 6 V சைஸ் இரு டிசைன்களில் சுவாமி படங்கள் லித்தோ கட்டிங் கார்ட் | | 120/00 | 20/00 |
| நிர். 1 B நவீன காட் | 10X7 | 65/00 | 9/50 |
| நிர். 2 இருமடிப்பு லித்தோ படங்கள் | 6X4 | 22/00 | 3/50 |
| நிர். 3 லித்தோ படங்களில் அஞ்சல் அட்டை | | 13/00 | 2/00 |
| நிர். 4 பிளாஸ்டிக் முருகன் காட் | X4 | 20/00 | 2/50 |

முன்கூட்டியே ஓடர்களை தந்து சகல டிசைன்களிலும் வி. பி. பி மூலம் பெற்றுக்கொள்ளலாம். சாம்பிள் செட் பெற விரும்புவோர் ரூ. 5/- அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

தயாரிப்பாளர்:

**சுஜிகலா இண்டஸ்றீஸ்,**

கொழும்பு-14.

விற்பனை நிலையம்:

**சுஜிகலா இண்டஸ்றீஸ்.**

135/1, செட்டியார் தெரு—கொழும்பு-11.

சாந்தி ஸ்டோர்ஸ், கொழும்பு-13.

மலர்விழி ஸ்டோர், கொழும்பு-11.


## குற்றக் கூண்டில்..

—7-ம் பக்கத் தொடர்

மார்க்சும் குற்றவாளிகள் தான். வாதிதரப்பினர் அவர்களையும் குற்றக்கூண்டில் ஏற்றுவார்களா?

### விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு

உலகின் பல நாடுகளில் விடுதலை இயக்கங்களுக்கு சோஷலிச வாதிகளின் ஆதரவுண்டு என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பிலிப்பைன்சிலே தனிநாட்டுக் கோரிக்கைக்காகப் போராடும் முஸ்லிம்கள், ஸ்பெயினில் பாஸ்க் பிரதேச விடுதலைக்காகப் போராடும் G. D. A. விடுதலை இயக்கத்தினர், எதியோப்பியாவில் ஈரிட்டேரி மாகாணப் பிரிவினைக்குப் போராடும் ஈரிட்டேரி விடுதலை இயக்கம், வட இத்தாலிய பீட்மெண்ட் விடுதலை இயக்கம் இவர்களெல்லாம் குற்றவாளிகளா? அப்படியானால இவர்களை ஆதரிக்கும் சோஷலிசவாதிகள் யாவரும் குற்றவாளிகளே?

ஐயா! இங்கே அரசியல் நிர்ணயசபையை தமிழ்மக்களின் விருப்புக்கு முரணாகக் கூட்டி அவர்களது சம்மதம் பெறாமலே அவர்கள்மீது சிங்கள தேசிய இனம் தனது யாப்பைத் திணித்துள்ளது. தமிழினத்தின் உரிமைகள் பற்றிய கோரிக்கைகள் அங்கே செவிடன் காதில ஊதிய சங்காயிற்று ஆனால் சோவியத் யூனியனின் யாப்பமைப்புக்கான அவையிலே ஸ்ராலின் "ஓர் அரசியலமைப்பு தேசிய இனங்களின் சமத்துவத்திலேதான் உருவாக வேண்டுமெனக்" குறிப்பிடுகிறார்.

### கூட்டுச்சேரா நாடுகளின் தத்துவம்

*1961, 1966, 1976*ம் ஆண்டுகளில் நிகழ்ந்த அணிசேரா நாடுகளின் மாநாட்டின் போது இனவாதம், குடியேற்றவாதம், ஏகாதிபத்தியவாதம் ஆகியவற்றை எதிர்த்துக் குரல் எழுப்புவதையும், செயற்படுவதையும் தன் தத்துவக்கோட்பாடுகளாகக்கொண்ட 3வது உலகம் தனது உச்சிமாநாட்டை அண்மையில் இலங்கையில் நடத்தியதோடு சிங்களப் பிரதேசத்தின் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களைத் தன் தலைவியாகவும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஒரு தேசிய இனத்தின் உரிமைமையை மறுத்து வருகின்ற. அதன பண்பாட்டு வாழ்வில் குறுக்கிடுகின்றது. இனஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடிக்கின்ற இவர் இத்தகைய ஒரு அமைப்புக்கு தலைவியாக இருப்பதற்குக் கிஞ்சித்தும் பொருத்தமற்றவர். இன ஒதுக்கலைக் கண்டிக்கும்3வது உலகில்மாநாடு நடைபெற்ற நாட்டிலே இன ஒதுக்கலை எதிர்த்து இன விடுதலை காணப் போராடுவது எந்தவகையில் குற்றமாக இருக்கமுடியும்?

(இத்துடன் திரு. கருணானந்தசிவம் தனதுவாதத்தை முடித்துக்கொண்டார்)

நீதிபதி:- வாதிதரப்புச்சட்டத்தரணி நாவேந்தன் நேற்போது தம் வாதத்தை நிகழ்த்துவார்.

—வளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குற்றக் கூண்டில் தமிழீழப் பிரிவினைவாதிகள்'

## யாழ் வளாக வழக்குரைமன்றில் நடைபெற்ற வாதப்பிரதிவாதம்!

## புதுமைலோலனின் வாதங்களுக்கு கருணாநந்தசிவம் கொடுத்த பதிலடி!

**இலங்கைப் பல்கலைக் கழக யாழ்வளாகத் தமிழ் மன்றத்தினர் செப்டம்பர் 4, 5 ஆகிய இரு நாட்களும் நடாத்திய முத்தமிழ் விழா நிகழ்ச்சிகளில் 'குற்றக் கூண்டில் பிரிவினைவாதிகள்' என்ற தலைப்பில் நிகழ்ந்த வழக்குரைமன்றம் பலரது கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்திருந்தது.**

**இவ்வழக்குரை மன்றின் நீதிபதியாக பிரபல எழுத்தாளரும் யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியருமான தேவன் பணியாற்றினர். பிரிவினைகோருவோர் குற்றவாளிகளே என்று வாதி தரப்பில் திருவாளர்கள் புதுமைலோலன், நாவேந்தன், சிவாசுப்பிரமணியம் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர். பிரிவினைவாதிகள் குற்றமற்றவர்கள் எனப்பிரதிவாதிகள் தரப்பில் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திருவாளர்கள் நா. கருணைநந்தசிவம், பொன். கணேசமூர்த்தி, சிவதாசன் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர். இச்சுவை மிகுந்த விவாதத்தின் முதலாவது பகுதியை இங்கே தருகிறோம்.**

சரியாக மு. ப. 11-15 மணிக்கு நீதிபதி மன்றில் அமர்ந்தார். அவர் விசாரணையைத்தொடங்கு முன்பதாகத் தமது ஆரம்பவுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"இவ்வழக்குப் புதுமையானதும், முக்கியம் வாய்ந்ததும் ஆகும் என இந் நீதிமன்றம் கருதுகிறது. இதிற் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தமிழ் ஈழப்பிரிவினைவாதிகள் எனக்குறிப்பிடப்பட்டபோதிலும் குறிப்பாக யாரென்பதைக் குறிப்பிடாததோடு குற்றப்பத்திரிகையும் கையளிக்கப்படவில்லை. ஆயின் பிரிவினைகோரும் அத்தனைபேரும் அவர்களை வழி நடத்துவோரும் குற்றக்கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளதாகவே கொள்ளவேண்டும. இங்கே வாதி, பிரதிவாதிகள் தரப்பில் தோன்றி வாதிடும் சட்டத்தரணிகள் தமது வாதங்களுக்குத் தக்க சான்றுகளை, ஆவணங்களைச் சமர்ப்பிப்பது வரவேற்கத் தக்கது: முதலில் வாதி தரப்புச் சட்டத்தரணி திரு. புதுமைலோலன் அவர்களைத் தமது வாதத்தை நிகழ்த்துமாறு அழைக்கிறேன்.

### புதுமைலோலன்

திரு. புதுமைலோலன் தமது வாதத்தின்போது, இன்று பிரிவினைகோரும் தமிழ்த்தலைவர்களையே தாம் குற்றக்கூண்டில் நிறுத்தப் போவதாகக்கூறி அவர்களது கடந்தகால வரலாற்றைத் திரும்பிப்பார்க்குமாறுகோரினர். 25 ஆண்டுகளாக இவர்கள் சாதித்தது என்ன? இடைக்கால ஒப்பந்தங்களைச் செய்துகொண்டார்கள். இவர்கள் வரலாற்றைத் திரும்பிப்பார்த்தால் இவர்கள் தமது வர்க்க நலனுக்காக முதலாளித்துவக் கட்சியான ஐ. தே. கட்சியோடு கூடிககுலவியதைத் தான் காணமுடிந்தது. தமிழநாடு கோருமிவர்கள் தமக்கென ஒரு எலலையைக் காட்டவில்லை. பூகோள அடிப்படையில் எப்படிப் பிரியமுடியுமென்பதைக்கூறவில்லை. தமது போராட்ட வழி அகிமசையா? வன்முறையா? என்பதைத் தெளிவுபடுத்தாது குழப்புகின்றனா. தமிழ ஈழம்தான் இவர்கள் இலட்சியமென்ருல் தேசியப்பேரவையில் இவர்களுக்கு என்னவேலே? தமது பாராளுமன்ற ஆசனங்களைத் துறந்து தமிழ் ஈழத்துக்காகப் போராடினுல என்ன? தமிழர்களுக்கிருக்கும் பிரச்சினைகளை நாம் மறுக்கவில்லை, ஆனல் அதற்குப் பிரிவினைதான் வழி என்பதை நாம் ஏற்கமுடியாது. நாட்டைத் துண்டாடும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இவர்கள் குற்றவாளிகளே! எனக்கூறித் தமது உரையை முடித்துக்கொண்டார்.

நீதிபதி: பிரதிவாதிகள் தரப்பில் திரு. நா. கருணைநந்தசிவம் அவர்களைத் தமதுவாதத்தை நிகழ்த்துமாறு அழைக்கின்றேன்.

### கருணைநந்தசிவம்

திரு. நா. கருணைநந்தசிவம் தமது வாதத்தைத் தொடங்கிப் பின்வருமாறு உரையாற்றினர்.

கனம் நீதிபதி அவர்களே! மிகமுக்கியமானதெனத் தங்களாற் குறிப்பிடப்பட்ட இந்த வழக்கில் வாதி தரப்பில் தம் வாதங்களை நிகழ்த்திய சட்டத்தரணி அவர்கள் குற்றச்சாட்டுகளைச் சரியான வகையில் தாக்கல் செய்யவில்லையென்பதைத் தங்கள் கவனத்திற் கொண்டுவர விழைகிறேன். பிரிவினைகோருவது ஏன் குற்றம் என்பதற்கான காரணத்தைக் குறிப்பிடாது, பிரிவினைகோரும் தலைவர்களின் கடந்தகால வரலாற்றைத் திருப்பிப் பார்க்குமாறு கூறி அவர்கள்மீது சில குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருக்கிருர், ஐயா! இக்குற்றச்சாட்டுகளுக்கு முதலில் பதிலளித்தபின், பிரிவினை வாதிகள் குற்றமற்றவர்கள் என்பதை நிறுவுவதற்கு என் வாதத்தை நிகழ்த்துகிறேன். செந்தமிழ் காக்கச் சிறைசென்று தடுப்புமுகாமிலிருந்து அன்புமகள் அன்பரசிக்கு மடல் வரைந்தவர்கள், 'சிறீ அளித்த சிறை" எழுதி செந்தமிழன் இன்னலை விளக்கியவர்கள் இன்று எங்கெங்கோ நின்று யார் யாருக்கோ எல்லாம் வாதிடுகிருர்கள். ஆனல் எம் இனத்துக்காக மன்றுகள் பலவற்றின் மூலம் வாதிட்டு எங்களுக்கு ஊட்டிய உணர்ச்சியின் உந்தலிலேதான் இன்று நாம் இப்பக்கத்திலே வாதிட நிற்கிறோம்.

### தவருன வாதம்

நீதிபதி அவர்களே! பிரிவினைகோரும் தமிழ்த்தலைவர்கள் தங்கள் வர்க்க நலனைக்காக்க ஐ. தே. கட்சியுடன் ஒட்டியிருந்த நேரங்களிலே தமது போராட்டங்களை மறந்துவிட்டனர் என வாதி தரப்புச் சட்டத்தரணி குறிப்பிட்டார். இக்கூற்றில் எள்ளளவும் உண்மையில்லையென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பிரிவினைகோரும் தலைவர்கள் இரண்டு பெரும் கட்சிகளோடும் மாறி மாறி ஒப்பந்தங்களைச் செய்து கொண்டமை வெளிப்படையான உண்மை. அதுமட்டுமல்ல எந்த ஐ. தே. கட்சியுடன் பிரிவினை வாதிகள் கூடிக் குலாவுவதாகக் குற்றம் சுமத்திஞரோ அதே ஐ. தே. கட்சிக்கு எதிராக 1952 ஹர்த்தாலிலே வடக்குக் கிழக்கிலே பங்கேற்று வெற்றிகரமாக நடக்க உதவியவர்கள் என் கட்சிக்காரர்கள். அதுமட்டுமல்ல கோரிய உரிமைகளை மறுத்த ஐ. தே. கட்சியை 1960ல் தோற்கடிக்க உதவியதும் என்கட்சிக்காரர்களே. ஆகவே வாதி தரப்பு சட்டத்தரணியின் கூற்றுத் தவருனதென்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்களெனக் கருதுகிறேன்.

தமிழ்நாடு கோருபவர்கள் தமக்குரிய எல்லையைக் காட்டவில்லையெனக் குறிப்பிட்டார். இதுபற்றிய என் பதிலை என் வாதத்தின்போது குறிப்பிடுவேன். அதற்கு முன்பதாகத் தமிழ்ஈழப் பிரிவினைப் போராட்டம் அஹிம்சை அடிப்படையில் அமையுமா? என்பதிலே என் கட்சிக்காரரிடம் குழப்பம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார். ஐயா! இதோ என் மதிப்பிற்குரிய வாதிதரப்புச் சட்டத்தரணி அவர்கள் தம் மகளுக்காக எழுதிய மடல்கள் அடங்கிய நூலிலிருந்து இதற்கான பதிலைக் கூறவிரும்புகிறேன்.

"அன்பு மகளே!... அஹிம்சைக்கு இமயமும் கூடப் பணியுமாமே; சூரியன் மறையாத சாம்ராச்சியம்கூட அஹிம்சையின் முன்னே அடிபணிந்ததாமே......!"

நீதிபதி அவர்களே! தனது கேள்விக்கான பதிலைத்தனது நூலிலேயே குறிப்பிட்டிருக்கிருர். எனது கட்சிக்காரரின் போராட்ட வழி அகிம்சையை அடிப்படையாகக் கொண்டதே!

அடுத்து பிரிவினைவாதிகளுக்குத் தேசியப் பேரவையில் என்ன வேலை என்று வினைத்தொடுத்தார். தேசியப்பேரவையும் எனது கட்சிக்காரரைப் பொறுத்தவரை ஒரு போராட்டக்களமே! உலகின் கவனத்தைக் கவரும் பிரச்சார மேடை அது. ஐரிஷ் விடுதலைக்காகப் போராடிய ஐரிஷ் விடுதலை இயக்கத்தினர் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் அங்கம்வகித்ததையும், வேல்ஸ், ஸ்கொட் பிரிவினைவாதிகள் பிரித்தானியப் பொதுமன்றில் அங்கம் வகிப்பதையும் இவ்வேளையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### குற்றச்சாட்டே தவறு!


"தமிழ் ஈழப் பிரிவினைவாதிகள்" என்ற கூற்றில் "பிரிவினைவாதிகள்" என்ற பதத்தை நான் ஆட்சேபிக்கினறேன். இந்த நாட்டில் பெரும்பான்மை, சிறுபான்மை இனங்களுக்கிடையே போராட்டம் நடைபெறவில்லை, பெரும்பான்மை இனத்திடமிருந்து சிறுபான்மை இனம் தனது பிரதேசத்தைப் பிரித்துக்கொள்ளப் போராடவில்லை. இங்கே நடைமெறுவது இரு தேசிய இனங்களுக்கிடையேயான போராட்டம்.

இலங்கை என்றுமே ஒரு நாடாக இருந்ததில்லை. தமிழ்த் தேசிய இனத்தின் ஆட்சிப் பிரதேசம்புறம்பாகவும், சிங்களத் தேசிய இனத்தின் ஆட்சிப் பிரதேசம் புறம்பாகவும் அமைந்திருந்தது. அந்நியரிடம் இறைமையை இழந்த எம்மை 1833ம் ஆண்டில் கோல் புறூக் சிபார்ரின் அடிப்படையிலே சிங்கள நாட்டுடன் ஒன்று சேர்த்தனர். ஐயா! பிரிவினைவாதிகள் தமது பிரதேசத்துக்கான எல்லையைக்காட்டுவார்களா என்று வாதிதரப்புச் சட்டத்தரணி கேட்டார். இதோ அநநிய வரலாற்ருசிரியர்கள், சிங்கள வரலாற்ருசிரியர்கள் ஆகியோரது குறிப்புக்களையும், என் கட்சிக்காரர் கோரும் தமிழ் ஈழத்தின் தேசப்படத்தில் பிரதியையும் உங்களிடம் சமர்ப்பிக்கிறேன். (ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.)

நீதிபதி அவர்களே! சோசலிசம் பற்றிக் கூறுகின்ற வாதிதரப்பினருக்கு ஸ்ராலின், லெனின் ஆகியோரது மேறகோள்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தேசிய இனத்துக்கு இருக்கக்கூடிய சரியான வரைவிலக்கணத்தை ஸ்ராலின் கூறி வைத்தார். இந்த வரைவிலக்கணங்களை அடிப்படையாகக்கொண்ட தமிழினம் ஒரு தேசிய இனம் என்பது தெளிவு. ஒரு நாட்டில் பல தேசிய இனங்கள் வாழலாம். ஆனல் தனது விருப்புக்கு விரோதமாக ஒரு தேசிய இனத்தை அடக்கித் தம்மோடு வைத்திருப்பவர்கள் பச்சை ஆக்கிரமிப்பாளர்கள். எனவே இந்த நாட்டின் தமிழ் தேசிய இனத்தை அவர்கள் விருப்புக்குமாருக அடக்கிவைத்திருக்கும் அரசே சர்வதேசச் சட்டப்படி குற்றவாளிகள்.

### ஸ்டாலின் கூற்று!

ஸ்ராலின் அவர்கள்தேசிய இனத்தின்பிறப்புரிமையைக் குறிப்பிடுகின்றபோது அது தன் தலைவிதியைத் தானே நிர்ணயிக்கும் உரிமையுடையது என்கிருர். அது மட்டுமல்ல அதனுடைய தேசிய வாழ்வில்; பண்பாட்டில், கல்வித்துறையில் வன்முறையாகத் தலையிடுவதற்குவேறு யாருக்குமே உரிமைகிடையாதென்றும் கூறினர்.



எடுத்ததெற்கெல்லாம் சோஷலிசம் பேசுகின்றவர்கள் உண்மைச்சோஷலிசவாதியின் இக்கூற்றைசெயற்படுத்த மறுப்பதேன்?

ஸ்ராலின் கூற்றுக்கமைய எமது கட்சிக்காரன் தம்மினத்தின் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்க முனைவது தவரு? எங்கள் கலாச்சாரத்திலே தலையிட்டு, எங்கள் மொழிக்கான விழா எங்கே நடைபெறவேண்டுமென்பதைக்கூடத் தாமே தீர்மானிக்க முனைகின்ற வாதி தரப்பினர்கள், ஸ்ராலின் கூற்றுக்கமைய ஒரு தேசிய இனத்தின் வாழ்வில் பலாத்காரமாக தலையிடும் குற்றவாளிகளல்லவா? பிரதிவாதி தரப்பினர் கூறுவதுபோலத் தமிழ்த்தேசிய இனத்தின் கல்வித்துறையிற் தலையிட்டு தரப்படுத்தல்போன்ற நடவடிக்கைகளால் தமிழ்ப் பிள்ளைகளின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணித்தல் போன்ற நடவடிக்கைகளால் அவர்களது வாழ்வை அழிக்கமுனைவது சரியாகுமா? இத்தகையவர்களோடு ஒன்றுபட்டு வாழ முடியுமா? இந்நிலையிலே என்று கட்சிக்காரர் தமிழ் ஈழத்தை மீளப்பெறப் போராடல் எந்தவகையில் தவருகும்?

எனதுவாதத்திற்கு ஆதாரமாக லெனின், ஸ்ராலின் போன்றவர்களுடைய மேற்கோள்களைக் காட்டினேன். இதற்குரிய நூல்களை உங்களிடம் கையளிக்கிறேன் பிரிவினை கோருவது குற்றமெனக் குறிப்பிடுகிருர்கள். ஆனல் ஸ்ராலின் என்னகூறுகிருர். "ஒரு தேசிய இனம் பிரிந்து போகும் உரிமையுடையது." என்கிருர்."

இதைச் சொல்லோடு நிறுத்திக் கொள்ளவில்லை. சோவியத் யாப்பின் 17வது விதியாகப் பிரிந்துபோகும் உரிமையைச்சேர்த்து அவர்கள் செயலிலும் காட்டியிருக்கிருர்கள்.

போலந்து, பின்லாந்து போன்றவை சோவியத்தை விட்டுப்பிரிந்த பிறகும்கூட இந்த உரிமையை யாப்பிலே வழங்கியிருப்பது குறிப்பிடத் தக்கது.

நீதிபதி அவர்களே! உண்மையான சோஷலிசத்தின் பெயரால் கேட்கிறேன் என் கட்சிக்காரர் பிரிவினை கோருவது எந்தவகையில் தவருகும. என் கட்சிக்காரர்கள் குற்றவாளிகளென்ருல் ஸ்ராலினினும், லெனினும், கால்

— 6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

# மட்டுநகரில் இரு வாலிபர்கள் கைது!

அதிகாரம் படைத்தவரின் ஆட்களை அடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நாவற்குடாவைச் சேர்ந்த தேவராசா, நாகராசா என்னும் இரு இளைஞர் பேரவை உறுப்பினர்கள் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டார்கள்.

24-9-76 வெள்ளிக்கிழமையன்று நண்பகல் 12மணியளவில் ஆலயமொன்றில் பொங்கலிட்டுக்கொண்டிருந்த தேவராசாவை, பொலிஸ் வாகனங்களில் சென்ற ஆயுதம் தாங்கிய பொலிசார் சுற்றிவளைத்துப் பிடித்தனராம். கைதுசெய்யப்பட்ட இடத்திலும், பொலிஸ் நிலையத்திலும் வைத்து தேவராசா மிருகத்தனமாகத் தாக்கப்பட்டாராம். 25-9-76 சனிக்கிழமையன்று இரவு காரொன்றில் சென்றுகொண்டிருந்த நாகராசாவையும் மற்றும்மூன்று இளைஞர்களையும் ஆயுதம் தாங்கிய பொலிசார் காரை வழியில் மறித்துக் கைது செய்தனராம். கார்ச்சாரதியும், மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்தவருமான திரு. தவராசாவும் பொலிசாரினால் தாக்கப்பட்டாராம்.

தேவராசா. நாகராசா ஆகிய இருவரும் 8-10-76ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்களாம்

மஞ்சந்தொடுவாய் பஸ் எரிப்பு சம்பந்தமாக கைது செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டிருந்த மட்/ தமிழ் இளைஞர் பேரவையைச்சேர்ந்த ராஜ்மோகனையும் மீண்டும்பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுவந்து விசாரணை செய்தார்களாம். தேவராஜாவைப ஸ்எரிப்புச்சம்பவத்தோடு தொடர்புபடுத்தவும் முயற்சிகள் மெற்கொள்ளப் பட்டதாம்.

## புவக்பிட்டியாவில் கலைவாணி விழா!

புவக் பிட்டியாவில் மக்கள் வைத்தியசாலையில் 2-10-76 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு டாக்டர் எம். சிறீஸ்கந்தராசா தலைமையில் நடைபெறும் கலைவாணி விழாவில் திரு. ஈழவேந்தன் கலந்துகொண்டுபேசுகிறார்.

## ஜே. ஆர். கூற்று

—1-ம் பக்கத் தொடர்

நமது தமிழ் ஈழத்தை அமைப்பதே நமது மீட்சிக்குரிய ஒரே வழியென்ற முடிந்த முடிவுக்கு வந்துவிட்டோம். இந்த நிலையில் அரசாங்கங்கள் மாறுவதும், தேர்தல் நடப்பதும் எமக்கு முக்கியமில்லை. சிங்களக் கட்சிகள் எதுவானாலும் பேச்சளவில் தமிழனுக்கு ஏதோ சலுகைகள் வழங்கிடப்போவதாகக் கூறி வந்தாலும் — அவை யாவும் அடிப்படையில் ஒரேமொழி, ஒரே இனம், ஒரே மதம் என்றகொள்கையையே பின்பற்றுகின்றன. அதே நேரத்தில் தென்னிலங்கையில் அடுத்த சில மாதத்தில் பெரும் நெருக்கடிகள் தலைதூக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு. அச்சமயங்களில் எமக்கு வாய்ப்பு ஏற்படும் போது,நமது இலட்சியவெற்றிக்காக அதைப் பயனபடுத்தத் தயங்கமாட்டோம்!"

—இவ்வாறு குரும்பசிட்டி சன்மார்கக இளைஞர்மன்ற முன்றலில் திரு. வே. மனோகரன்தலைமையில்நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய திரு. அமிர்தலிங்கம்தெரிவித்தார்





பாவியுங்கள்

பளிச்சிடும் வெண்மைக்கு

**ரோயல் நீலம்**

தயாரிப்பாளர்கள்:

சிவா இன்டஸ்ரீஸ்
112 3/1, 4ம் குறுக்குத்தெரு,
கொழும்பு—11.

விநியோகஸ்தர்கள்:

சேகர் அன் பிறதர்ஸ்,
ஆதம்மலி கட்டிடம்,
20, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.
தொலைபேசி: 35049



**செல்லமகால்** 2வது வாரம்

**இப்பொழுது காட்சியளிக்கிறது**

ரவிச்சந்திரன், ஜெயலலிதா. அசோகன், நாகேஷ், மனோரமா, வி. கே. ராமசாமி நடித்த-

**அன்று கண்ட முகம்**

(புத்தம் புதிய கொப்பி)

தாஜ்மஹால் (மாத்தளை) 2வது வாரம்

**நினைத்ததை முடிப்பவன்**

கிங்ஸ் பதுளை

**அவள் ஒரு தொடர் கதை**

2வது வாரம்

**கெபிட்டி**

சிவகுமார், ஜெயசுதா, ஸ்ரீப்பிரியா, கமலஹாசன், தேங்காய் சீனிவாசன், அசோகன், மனோரமா, டி. கே. பகவதி, பண்டரிபாய், ஜயலக்ஷ்மி —நடித்த

**பட்டிக் காட்டு ராஜா**

ஈஸ்மென் கலர்

கதை, வசனம், டைரக்ஷன்
கே. சண்முகம்

**பிளாசா** 8வது வாரம்

சிவாஜி கே. ஆர். விஜயா
ஸ்ரீகாந்த், பிரமிளா, வி.கே.ராமசாமி,
— நடித்த —

**தங்கப் பதக்கம்**

(ஈஸ்மன் கலர்)

**கெப்பிட்டல்**

**பூம்புகார்**

எதிர்பாருங்கள்

தேவரின் **திருவருள்** ஈஸ்மன் கலர்

**கிங்ஸ்லி—லிடோ** 3-வதுவாரம்
(கொழும்பு) (யாழ்நகர்)

சிவாஜி கணேசன், ஜெயலலிதா, மஞ்சுளா
மேஜர் சுந்தரராஜன். முத்துராமன்,
மற்றும் பலர் நடித்த

**அவன் தான் மனிதன்**

(ஈஸ்ட்மென் கலர்)

திரைக்கதை டைரக்ஷன் — A. C. திருலோகச்சந்தர் M. A.


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1976-ம் வருடம் ஒக்டோபர் மா[illegible] ந்திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org